**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

அர்ச்சுனன் திருக்கலியாண மென்னும்

# சுபத்திரை மாலையீடு

## நாடகம்



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
வெங்கடாமய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.

இதன் விலை] [அணா 12.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அர்ச்சுனன் திருக்கலியாணமென்னும்

# சுபத்திரைமாலையீடு

## நாடகம்



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள் விலாச அச்சு நிலையம்,
சென்னை.

இதன் விலை] 1949 [அணா 12

உ

ஸ்ரீ கண்ணன் துணை.

## அர்ச்சுனன் திருக்கலியாணமென்னும்

# சுபத்திரை மாலையிடு நாடகம்

### விநாயகர் துதி சீசபத்தியம்.

ஸ்ரீனந்த கோவிந்த தேவநா ராயணன்
சுபத்திரை கலியாணம் பாடவேதான்
யாதவ னொளிபோன்ற அர்ச்சுனன் மீதிலே
ஆசையாய் மையல்கொண்ட அருவை யாள்தான்
காதலி சுபத்திரை கலியாணம் நான்பாட
யாதொரு பிழைகள் வந்திடாமல்தான்
மாதவந் தன்னிலே வளர்நகர் வாழ்கின்ற
வாரணன் முகத்தனார் காப்பதாமே.

### சுப்பிரமணியர் துதி சீசபத்தியம்.

தனுவனைத் தெதிர்கின்ற சத்ராதி தன்னையே
அணுவாகப் புரவித்த அர்ச்சுனன் தான்
மனுக்கள் மாதாதியர் வனைத்தெதிர் செய்திடும்
மன்னவன் தோளினில் மாலையிட்ட
அன்னநடை சுபத்ரை அருவையாள் கவிதைமுன்
ஆறுமுக வேலவர் அரும்பதம் காப்பே.

### சரஸ்வதி துதி அகவல்.

சன்னாசி யவர்போலே தார்வேந்த னர்ச்சுனன்
சதிராக வந்தவன்தா னிளில் வீழ்ந்து
சொன்னசொற் றவராமல் தொழுது நின்றவனை
சுபத்திரை கலியாணம் சுந்தரமாய் பாடவே
உதித்ததோர் வாக்கை உலகினி லரிய
நன்னிலந் தன்னிலே நாவினு லுரைத்தேன்
நாரணி சரஸ்வதி நாயகி போற்றி
மன்னு மாதவரான பிரம்மநார் நாவிலே
வாந்தந்து வாணிநீ அருள்தர வேணும்
செழித்திடும் வலகமா கதிக்குந்தென் பாரிசத்தில்
வாழ்ந்திருக்கு மருளன்ன வன்னியகுல தேவநார்
துவாரவாசு தேவன் தேவகி யளித்திடும்
சுபத்திரை கலியாணம் செப்பவே நானே
வடிதமிழ்க் கவிபாடும் வல்லவ நார்களே
மாதவன் றருநாதன் வள்ளலான

தடமதாகிய கிஷ்டப்ப நாயக்கனுர் பாடலே
நன்மையாய்க் கைகொண்டு மகிழுவீர் நீங்கள்
தொடர்கவி குற்றங்கள் சொல்லாமல் கவிவாணர்
சொற்கற்றிடும் அடியர் ஆனையருள் தந்து
தாண்டியெனை ரக்ஷிக்க தோகையே காப்பாளம்.

## கதையின் வரலாறு அகவல்.

சொல்லியபெருமை துவாரகாபுரியில்
எல்லையிலவர்கள் எதிர்குலத்துதித்தோர்
வல்லமையுடைய வரும்பெலதீரன்
நல்லமாதவனுர் நல்லுடனிருக்க
சந்ருகுலத்தரியன் தர்மருக்கிளையோன்
சுந்திரமுகத்தோன் செல்வ அர்ச்சுனன்தான்
இந்திராபுரியி லிருந்தரசாள
வந்ததோர் விதியால் மன்னவன் தானும்
தீர்த்த யாத்திரைகள் சென்றுதான் பரமன்
கோத்திர முதலாய்க்கூடியே நடந்து
தேசங்கள்தோறும் தீர்த்தங்களாட
வாசமாய்த்திரிந்து மன்னனர்ச்சுனன்தான்
வடமதுரைதன்னிலே வந்துமேயிருக்க
அடலதாய்ப்பலராமர் அறிந்தவரெழுந்து
எங்களாண்டவரே எழுந்தருளென்று
தங்கள்தானத்தில் சதிருடனிருத்திப்
பணிவிடைக்காக பைங்கிளியாளை
அணிகுழல்சுபத்ரை அம்மனையழைத்து
இருந்திடும்போது இன்பமுமிகுத்து
வருந்தியேகிருஷ்ணரும் மாயவஞ்சத்தால்
அர்ச்சுனன்தானும் அருமையாள்தன்னை
விவாகமேசெய்து தன்னகர்தனக்கே
பலராமர்கண்டு பரதவித்தெழுந்து
கோபமேகொண்டு கொடுங்கண்சிவந்து
தாபமாம்மனது தானதுதெளிந்து
மன்னனர்ச்சுனனை வாவென்றழைத்து
அன்னகர்ஜனங்கள் அனைவருமாக
மணமதுசெய்து மாலையிட்டவரும்
அணிகுழலாளும் அர்ச்சுனன்தானும்
இந்திராபுரிக்கு யேகியேநடக்க
சந்திர தருமர் சீர்பாதம்பணிந்து
இந்தநேர்கதையை யிசையவேபுலவோர்
அறிந்துளங்களித்து ஆதரிப்பீரே

## கட்டியன் வருகிற கவி.

துஷ்டரை வென்றகிருஷ்ணன் சுகம்பெற நடத்தும்நல்லோர்
மட்டலர்க் கமலமாது வார்த்தையிலிருந்து வாழ்வோர்
ஓட்டியே வெற்றிகொள்ளும் உயிர்பல ராமர்வாசல்
கட்டியக் காரன்வந்து களரியில் தோன்றினனே.



## கட்டியன் வருகிற தரு.

நகைத்தமுகம் துலங்கவே கட்டியக்காரன்
நாரணனார் சபையில் கட்டியக்காரன்
சொகுசுடன்மேனிகானே காலிற் சிலம்பொலிக்கவே
வெகுவித மேலும்கட்டாரி யேந்தவே
துணைப்பணியதுபோல் சபைதன்னில்
ஓடியே வந்தனனே
பல்லும் பலகைப்போல் சொகுசுடனே
பார்த்தவிழி துலங்கவே
வல்லமையாகவேதான் கட்டியக்காரன்
வாரானிதோ சபையில்
கந்தனுவென்றுசொல்லி கட்டியக்காரன்
நாரணனார் சபையில் சிந்தைமகிழ்வாக சபைதன்னில்
சொகுசுடன் பேசினனே நகை

பொது வசனம்:—அகோசெப்பபடியென்றால் வடமதுராபுரி பட்டணத்தை அரசுசெய்து வாழ்கின்ற உக்கிரசேனமகாராஜன் சபைக்கு கொலுவாக வருகிறவிதங் காண்க.



## உக்கிரசேனன் வருகிற கவி.

உகமையாயுதித்த உக்கிரசேனன்தானும்
உத்தமர்கள்முதலான ராஜர்போற்ற
மகிபதியும்போற்ற மறையோர்கள்வாழ்த்த
வளர்கோஷ்டமென்னதிகமன்னர்சூழ
தெய்வரம்பையர்கள்வந்து பாடியாட
ஜெகமெல்லாம் புகழும்ஜெய உக்ரசேனன்
சிரசினிலே மணிமுடியும் பளபளென்ன
சீருடனே சபையில்வந்து தோன்றினாரே.

## பலராமர் உக்கிரசேனன் சாத்தகி வருகிற தரு.

இயலுள்ள குணசீலன் யெதிர்குலமகிபாலன்
சுவாதிமண்டலாதிபராஜன் துவாரகாபுரியில்வாசன்
அந்தணர்கோஷ்டம்பாட அருவயர்நடனஞ்செய்ய
வந்தவர்மகிழ்ந்திட மண்டலாதிபர் புகழ்ந்திட
அகமையுள்ள கன்னியர்கள் அரிவயராத்தியேந்த
தகமைபெரும் உக்ரசேனன் சதிருடனேகொலுவானார்
அதிகபலபத்திரும் அரசரும்புடைசூழ
மதியுடைமந்திரிமாரும் வரிசையுடன்வந்துமேவினர்
நாகசுரமேளமோத நாதகின்னரிகள்பாட
தாரணிபுகழ் உக்ரசேனன் சபையில்வந்துகொலுவாகினார் இ

## கிருஷ்ணமூர்த்தி வருகிற கவி,

குணைகட லுலகிற்சேனை கொளுவினி லிருக்கும்போது
புணைகட லமூர்தம்போற்ற உம்பர்கள் முனிவர்கோமான்
துணைகடற் பணிவோன்மாயோன் துளசிகா பரணமூர்த்தி
கிணைகடற் புகழும்கிருஷ்ண தேவரும் வருகின்றாரே.



## கிருஷ்ணமூர்த்தி வருகிற தரு.

| | |
|---|---|
| வந்தாரிதோ | கரிவரதராயர் |
| சிந்தாய்க் குலந்தவிழ்த்த | செங்கண்மாயர் |
| திலர்தமுடி | தானது துலங்க-நல்ல |
| நெத்தியில் கஸ்தூரி | நாமிலக் |
| கந்தரத்துளப | மாலைகுலுங்க |
| கவுஸ்துவாபரண | மணியாரம்துலங்க |
| கையில் திகிரிசங்கும் | கெதையெடுத்து |
| மெய்யில்பீதாம்பரம் | தன்னையுடுத்தி |
| வையகத்தோர்களிக்க | வந்துமேவினாரே வந் |

## கிருஷ்ணமூர்த்தி ஒயில் தரு.

| | |
|---|---|
| ருக்மணிசத்யபாமா | மித்துருசாம்பவதியுடன் |
| தக்கதோர்காளந்தியுடனே | ஸ்ரீ கிருஷ்ணதேவர் |
| சம்பிரமுடன்வந்து | மேவினா |
| தேவகிகுமாரனை | ஸ்ரீரங்கநாதரிப்போ |
| வேதியர்கள் கோஷ்டம்பாடவே | ஸ்ரீ கிருஷ்ணதேவர் |
| வீரமுடன் வந்து | தோன்றினார் |
| ஆதிநாராயணமூர்த்தி | அரிகரிவாசுதேவர் |
| சோதிமுடித்தான் துலங்கவே | ஸ்ரீ கிருஷ்ணதேவர் |

சொகுசுடனே வந்து மேவினர்
மெய்யினிற் பீதாம்பரங்கள் வேடிக்கை உல்லாசமுடன்
தையலர்களுடன்கூடியே ஸ்ரீ கிருஷ்ணதேவர்
சம்பிரமுடன் வந்துதோன்றினார் ருக்

பொது வசனம்.

இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கொலுவாக வீற்றிருக்கும் போது ஸ்ரீ கிருஷ்ணதேவரைக் கண்டு தோத்தரிக்கும்படி மாதவி யென்னும் கோபிகா ஸ்திரீகள் வருகிற விதங் காண்க.

மாதவி சொல் கவி.

அந்தரசபையில்ராஜர் அரிகரியென்னவேதான்
தந்தியின் துதிக்கைகபோலே தாமொருபுரமேயாட
வந்தவளொருத்தியின்கண் மயிர்கலைந்துலங்கநல்ல
சுந்திரமெனவேகுட்டி மாதவிதோன்றினளே.

மாதவி வருகிற தரு.

வந்தேனம்மா வந்தேனம்மா மாதவிப்பெண்கள் வந்
கண்டேனம்மா கண்டேனம்மா கன்னிப்பெண்களா கண்
வந்தேனம்மா வந்தேனம்மா வஞ்சியிளங்கொடி வந்
கண்டேனம்மா கண்டேனம்மா நல்ல வாலமோகினி கண்

மாதவி சொல் வசனம்.

அகோ வாருங்களடி கோபிகா ஸ்திரீகளே ஸ்ரீ கிருஷ்ண தேவரை அஷ்டலக்ஷிமிகளெல்லாம் தோத்திரம் செய்தபடியால் நாமும் போய் சேவித்து அழைத்து வருவோம் வாருங்கள் கோபிகா ஸ்திரீகளே.

கோபிகா ஸ்திரீகள் தோத்தரிக்கும் தரு.

ராதாலோலா லக்ஷிமிலீலா மாதவா கேசவா வைகுந்தவாசா ராதா
நந்தமுகுந்தா நவநீதசோரா மந்திரதாரா மறையிருமார்பா ராதா
சிந்துகெம்பீரா செகல்வராயா நந்தகுமாரா அசோதைமைந்தா ராதா
வேணுகோபாலா விஜயனுகூலா தானவராசியபாலா தயித்திர்யகாலா
[ராதா
பன்னகசயனா பங்கஜவதனாகன்னியரேகனாகவுஸ்துவாபரணா ராதா
கெருடதுரங்கா கனகாப்பிரதங்கா கருணைதரங்காஸ்த்தூரி பங்கா
ஸிராமலவதனவேண்டினேனுதா சரிகிருஷ்ணவரதாகழலடிபோற்றி

## பொது கவி.

நாரணன்வந்தபின்பு நன்மைசேர்மாதரான
சீருள்ளமித்ருவிந்த செல்விருக்மணிகாளேந்தி
வாரணிமுலையாள்சாம்ப வதியுடன்லக்ஷ்மிதேவி
கூரியப்பெண்களெல்லாம் கும்மிகளாடலுற்றார்.

## பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியை கோபிகா ஸ்திரீகள் தோத்திரித்துப்போன பின்பு சத்தியபாமா ருக்மணி காளந்தியின்னும் சில பெண்களுங்கூடிக்கொண்டு கும்மியடிக்கிற விதங்காண்க.

## ருக்மணி சத்தியபாமா சொல் தரு.

வாருங்கடி தோழிப்பெண்களா — மகிழ்ந்துகும்மியடித்தாட
சேருங்கடி பெண்களெல்லாம் — ஸ்ரீ கிருஷ்ணதேவர்முன்னே
ஆடுங்கடி கரிவரதர் — அழகுக்கொருபதமெடுத்து
பாடுங்கடி நாகத்தின்மேல் — பள்ளிகொண்டநாதர்முன்னே
சீர்சிரந்தனுவிடும் — திருமணிகழகுடனே
கார்போன்றமேனியனும் — கனக்கிரீடந்தன்னழகும்
காதவிடும்குண்டலமும் — கவுஸ்த்துமாமணியழகும்
சோதிரத்னமாமணியும் — துளபமாலையினழகும்

காதல்மிகுமார்பில்நல்ல — கனத்தசங்கும்திகிரிகளும்
பரிவுடனேசாரங்கமும் — பஞ்சாயிதத்தழகும்
பங்கைரதியூர்வசிபோல் — வாக்குயர்ந்தகோதையரே
தங்கமடமங்கையரே — தையல்முத்துமோகினியே வாரு

## ருக்மணி சொல் கவி.

கோதையரெல்லாங்கூடி கும்மிகளாடிப்பாடி
சீதாநந்தகிருஷ்ணா தேவகிசுதனேயென்று
காதலாயென்னையாளும் கரியமால்வரதராயா
நாதனேநின்றன்போற்றி நலமுடன்போற்றினேனே.

## பொது வசனம்.

அதோதெப்படியென்றால் அஷ்டலக்ஷுமிகளுடனே கிருஷ்ண தேவர் கொலுவாக யிருக்கும்போது அஸ்த்தினாபுரியிலிருந்து விதுர மகாராஜன் துவாரகைக்கு வருகிறவிதங் காண்க.



விதுரன் வருகிற கவி.

கொந்தலத்துடையோன்தானும் கொலுவினிலிருந்தபோது
சுந்திரசுபத்ரைதன்னை சுகதுரியோதனர்க்
வந்துமேகல்யாணத்தை வகையுடன்முடிக்கவெண்ணி
தந்திரவிதுரன்வில்லில் சமர்த்தனும் வருகின்றானே.

விதுரன் வருகிற தரு.

ஆரியதிரவேதிரைகடல்வாடவே தேருடனானைகள்சேனைபுடைசூழவே
சூரியகவரிகள்குடைகொடிபிடிக்கவேவீரியக்காரருடன்விதுரனுந்தோ
பருதிநுதித்தாற்போல பார்த்திபர்புடைசூழ (ன்றினனே
குருகுலசிகாமணியும் கொற்றவரும் தோன்றினரே
சித்திரைச்சிலம்பசைய செம்பொன்மணிதேரேரி
அர்த்தராவில்சேனைசூழ அரசன்வந்துதோன்றினரே
புத்தியுள்ள மந்திரிமார்கள் புரவலர்கள்புடைசூழ
வெற்றிவேல்விதுராஜன் விருடதுனேதோன்றினரே
மோதும்பேரிகைமுழங்க மூத்துநாகசுரம்பாட
ஓதும்வேதியர்சூழ உம்பர்களதிசயிக்க
மாதுரதிபோலேபெண்கள் மங்களமங்களமென்று
ஆதியானவிதுராஜன் அரசன்வந்துதோன்றினரே ஆரி

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

விதுரரேசொல்லக்கேளீர் வீருள்ளதிருதராஷ்டிரன்
ததிபெரும்கிருபர்துரோணர் துரியோதனாதியர்கள்மற்றோர்
அதிரதர்முதலாயுள்ள அஸ்த்தினாபுரத்துவேந்தன்
யிரதகஜமுடனேவந்த காரியமியம்பிடீரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் விதுரமகாராஜனே அனேகம் ராஜாக்கள் மந்திரிப்பிரதானிகள் சூழத்தக்கதாக நீர் வந்த காரியங்களை யின்னதென்று தெரியச் சொல்லவேண்டும் மகாராஜனே.

விதுரன் சொல் கவி.

கொத்தலத்துடையோனெங்கள் குலதுரியோதனர்க்கு
சுந்திரமாதுவான சுபத்திரைப்பெண்ணைநீங்கள்
தந்திடவேண்டுமென்று சம்பந்தமூராமைபேச
வந்தனனரசேயெந்தன் மகிபனேபுகலுவீரே.

விதுரன் சொல் வசனம்.

வாருமையா சுவாமீ வாசுதேவா பலராமரே உக்ரசேன மகாராஜனே கிருஷ்ணமூர்த்தியே கேளுங்கள் நான்வந்த விபரம்யென்னவென்றால் ராஜாதிராஜன் ராஜகெம்பீரனான துரியோதன மகாராஜனுக்கு உங்கள் தங்கையாகிய சுபத்திரையைக் கேழ்க்கவந்தேனையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

பலராமர் கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அம்புவில்லவரேகேளீர் அஸ்த்தினாபுரத்துவேந்தன்
யின்பமாய்நீங்கள்கூடி யெழுதொனுவடிவிநாலை
சம்பந்தம்செய்வதர்க்கு தடையொன்றுமில்லைசொன்னேன்
தெம்புடன்தங்கைதன்னை தருகுரோம் தருகுரோமே.

பலராமர் சொல் வசனம்.

அகோவாரும் விதுரமகாராஜனே யோகக்ரேஸ்பராகிய துரியோதன மகாராஜனுக்கு யெங்கள் தங்கையாகிய சுபத்திரையைக் கொடுக்க சந்தேகமென்ன யிருக்கிறது அப்படியே தருகிறோமையா விதுரமகாராஜனே.

பொது கவி.

தருகிறேனென்றபின்பு தரும்புகழ்விதுராஜன்
வருகிறேனென்றுசொல்லி மனமகிழ்ந்திருந்தகாலை
விருதொடுகொலுவிருந்த வேந்தர்க்குவிடையளித்து
புரிதொழிலிருக்கைதன்னில் புக்கெனஅரசர்சொன்னார்.

### அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ கேளும் ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா ஜானகிபிராணநாயகா சங்குசக்கராயுதா தாஷ்டீகமர்த்தனா கோவர்த்தனகிரி வல்லபா கோபாலா ஸ்ரீமணாளா அனந்தகல்யாணகுணா அஷ்டலக்ஷ்மி சமேதா அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா அடியேன் கண்ணுக்கு இமைபோலே காத்து வரப்பட்ட கர்த்தனே சரணம் சரணமையா சுவாமி பகவானே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாரும் பிள்ளாய் கிரீடியாகிய அர்ச்சுன மகாராஜனே நீ என்னால் வந்ததேயுண்டானால் மகாராஜனாக தீர்காயசுபெற்று சுகமாய் வாழக்கடவது யெழுந்திரும் அர்ச்சுன மகாராஜனே.

### அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ கேளுமையா சுவாமி பகவானே தாங்கள்மாத்திரம் தனித்து யென்னிடம்வந்த காரியார்த்தங்களை யெனக்குத் தெரியும்படியாகச் சொல்லவேண்டும் கர்த்தனே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வீரனேசொல்லக்கேளாய் விளம்பிடுசுபத்திரைதன்னை
தாரமாயடையவாமென் சகாயமுண்டுபாயம்சொன்னேன்
சீரியபெரியோர்போலே திருத்தெண்டுசன்னாசியாக
பூரணமானவேஷம் போட்டுமேவருகுவாயே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாரும் மைத்துனனாகிய அர்ச்சுன மகாராஜனே யென்னுடைய தங்கையாகிய சுபத்திராதேவியை துரியோதன மகாராஜனுக்குக் கேழ்க்க நாங்கள் கொடுக்கிறோமென்று யென் தமையனாகிய பலராமர் சம்பதித்திருக்கிறார் ஆகையால் அதற்கு முன்னமே நீ விவாகம் செய்துக்கொள்ளவேண்டும் அதற்கு யொரு யோசனையிருக்கின்றது அது யென்னவென்றால் நீ திருத்தெண்டு சன்னாசியாக மாறுவேஷம் கொண்டுவாரும் பிள்ளாய் அர்ச்சுன மகாராஜனே.

### அர்ச்சுனன் சொல் செபத்தியம்.

வாயிளங்காயுமூன்று வகைபெறும்பலமூாத
  காபெரும்வேஷமே கொள்ளுமென்றீர்
தாயென்றும்பெண்டு பிள்ளைகளும்நல்ல
  சன்னாசியாருக்குத் தானுமுண்டோ
ஆயனேயனையிதனை சோதிதீர்
  அனந்தசெயகேத்ரனே அரிவனையா
மாயவனேகேசவனே கவுரத்னமார்பனே
  மாயவாயிதுவார்த்தை மாக்கிடரே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ கேளுமையா சுவாமி அனந்தசயனா நீர் யெனக்கு நல்ல வார்த்தைச் சொல்லவந்தீர் நான் திருத்தெண்டு சன்யாசி உருவம் யெடுத்துக்கொண்டு இரிந்தால் மறுபடியும் விவாகம் செய்துக்கொள்ளலாமோ யென் மனதை சோதிக்கும்படியாக வல்லவோ யிந்த வார்த்தைகளைச் சொல்லவந்தீர் தாங்கள் யெண்ணிய யெண்ணத்தை மாத்துவிடும் பகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

மாத்திகழ்ராசேதிருச்செத்தியாவு தென்மந்த்ரம்
சிரந்தகாயேஸ்த்ரீபூனூல்சிவபதம் புகலயாவும்
ஆர்த்தவர்தமக்குப்பின்பு சுகமனுபவிப்பதாக
திருத்தெண்டுசன்னியாளால் திரும்பவும்விரும்பபுளாமே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாரும் மைத்துனனாகிய அர்ச்சுன மகாராஜனே அதினாலே யாதொன்றும் தோஷமில்லை நீ சந்தேகப்படவேண்டாம் திருத்தெண்டுசன்னியாசி வேஷமெடுத்துவாரும் அர்ச்சுன மகாராஜனே.



அர்ச்சுனன் சன்னியாசிவேஷ மெடுக்கும் கவி.

விரும்பியதெண்டுங்காவி வேஷமாய்க்காடுதன்னில்
வரும்பயமொழிந்துபூமி மானிடராருங்காண
உடம்பயில்மனமுங்காவி யுடைக்குடை குடையுமாக
அரும்பியசன்னியாசிபோல அர்ச்சுனன்தோன்றினானே.

### அர்ச்சுனன் சன்னாசியாக வருகிற தரு

சன்னாசிவேஷமாகினான் தனஞ்செயனும்
மின்னாளாசைகொண்டு வாடினான்
விமலரடிசிரசின்மீதில் வித்தகனும்வைத்ததுபோல்
நிமைமூடிகொக்கைப்போலே நிஷ்டையிலிருந்தான்பேசி
அண்டர்கள்முனிவர்கள் அதிசயிக்கவே
அரியோ அரியென்றுசொல்லி அரும்புனலாடிவர
கருவிதக்கர்ண்ணதிகளை யொடிக்கியேயிந்த
கானகத்திடையினில் யேகினானே
பார்த்தவர்க்குமெத்தமெத்த பரமாத்துவரென்று
தோற்றும்படிசன்னாசியாய் தோன்றினாரே-சன்ன

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

தோன்றியசன்னாசிநீதான் சொல்லுவேன்னிருபாகேளும்
நான்துவாரகைக்குச்சென்று நாளையான்மீளுங்காலை
வானிடம்குவடுநீண்ட மலைமுழுஞ்செடியிற்புக்கி
ஊன்றியபத்தோர்போல உரங்குவாய்உரங்குவாயே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ வாரும் பிள்ளாய் அர்ச்சுனா நான் நாளையத்தினம் வசுதேவர் பலராமர் உக்கிரசேனன் முதலானபேரும் இவ்விடத்திற்கு வருவோம் நீர் இவ்விடத்தில்தானே மகா தபசியைப்போல் உரங்கிக் கொண்டு இந்த கானகத்தில் இருமென்று அர்ச்சுனனுக்கு சொல்லிவிட்டு கிருஷ்ணதேவர் தமையனாராகிய பலராமரிடம் வந்து சொல்லுகிற விதங்காண்க.

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அனைவரும்புகழும்வேந்தர் அருளுறும்உக்கிரசேனன்
மனைபலபத்ராமர் மருத்துவமற்றுள்ளோரே
புனவனபோஜனத்துக் கின்றாம்போகவேண்டும்
தினம்பலபத்ராமர் சொகுசுடநேகுவோமே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோ கேளும் தமையனாரே நாளையதினம் நல்ல புண்ணிய காலமாக இருக்கின்றது நாமனைவரும் வனபோஜனத்துக்கு போய் வருவோம் வாருங்களையா சுவாமி.

### வனபோஜனத்திற்குப் போகும்-தரு.

போவோம்வாரீர்வனத்திற்கு போவோம்வாரீர்
போவோம்வாருமிந்த புண்ணியகாலத்தில்
கூவும்குயில்மயில் கொஞ்சும்வனத்துக்கு—போ

பூங்காவனந்தனிலே யிந்தபுண்ணியகாலத்திலே
பாங்கானபிராமணாள் நம்மைபார்த்துபுகழ்ந்திட
நீங்காமல்வைகுண்டம் நேருமெளிதாக-போ

தர்மம்பெறிதல்லவே அந்த சங்கார்க்கொப்பிதமாய்
வர்மங்களில்லாமல் வாரும் மனிதரே
கர்மவினை களை கடுகத்துரத்துவோம்-போ

னந்தனென்றுசொல்லிமனிதரே நாவில்துதித்திடுங்கள்
சிந்தனையில்லாமல் சேர்வோம்திருவடி
சந்தேகமெண்ணாமல் தர்மத்தைசெய்யுங்கள்-போ

### பொது கவி.

நருந்திகழ்க்களபம்பூசி நாவலர்முதலோரெல்லாம்
பொருந்தியவனத்திலேதான் போஜனமான்பின்பு
விருந்துண்ணமனவோர்நெஞ்சம் கிக்கியகொக்குபோலே
பிருந்தசன்னசிமுன்னே யாவருமேகினரே.

### பொது வசனம்

இவ்விதமாக பலராமர் சாத்தகிகிருஷ்ணமூர்த்தி உக்கிரசேனன் மின்னம் அனேக மன்னர்களும் சூழத்தக்கதாக கானகம்சென்று வனபோஜனம்செய்து கானகத்தில் பிராகின்றசன்னசியைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

### பலராமர் சொல் கவி.

ஏகியேயெதிர்குலேசன் பிருந்தசன்னசிமுன்னே
ஆகமும்புளகமாகி அடியினைத்தொழுதுபோற்றி
யோகமாயிருக்கவென்றால் உரைவிடமுண்டுகண்டீர்
நாமிலதக்கண்டுயெந்தன் நகர்தனில்வருகுவீரே.

### பலராமர் சொல் வசனம்

சருணம் சருணமையாசுவாமி தங்களைப்பார்த்தால் மகாபெரிய வரைப்போலே காணப்படுகிறது யிந்த ஆரண்யமான கானகத்திலே நீர் தனியாயிருக்கவேண்டியதென்ன நம்முடைய பட்டணத்திற்கு யெழுந்தருள வேண்டுமையா சுவாமி தபசியே.

பொது வசனம்.

இவ்விதமாக பலராமர் சன்னாசியைப்பார்த்து பட்டணம்வாருமென்று அழைத்தமாத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவர் தமையனாகிய பலராமரைப்பார்த்து கிஷ்ணமூர்த்தி சொல்லுகிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

காட்டிலிருந்தவரை கண்டுமனமகிழ்ந்து
நாட்டில்வருவீரென்று நவிலவேண்டாமே

பலராமர் சொல் தரு.

நவிலவேவேண்டாமென்று நலமாகப்பேசுராய்
புவியில்பெரியவரை போல்கண்டதில்லை

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கண்டதுண்டோவென்று கனமாகபேசுராய்
துண்டசன்னாசியரை துணையழைப்பானேன்

பலராமர் சொல் தரு.

அழைப்பதேனென்றுசொன்னீர் அருமைத்தபசியரை
பிழைப்பைநீர்கெடுக்குறாய் பேசாதேபோம்போம்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பேசாமல்போவென்று பெருமையாயுரைத்தீரே
தேசமரியாதோதான் திருட்டுசன்னாசியை

பலராமர் சொல் தரு.

தேசபரியுமென்றீர் தேசிகானதனை
காசியிலேகண்ணாலே கண்டதுமுண்டோசொல்வீர்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கண்டதுண்டோவென்றீர் களவுசன்னாசியரை
அண்டியிருந்தால்நமக் அழகில்லை அய்யாவே

பலராமர் சொல் தரு.

அழகில்லவென்றுசொன்னீர் அவர்க்குமனதுநோக
சிறுமைகள்சொல்லாதீர் தேசமழிந்துவிடும்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தேசமழியுமென்று சீருடனுரைத்தீரே
போரவர்ரவர்தன்னை பூசிக்கலாமோ

பலராமர் சொல் தரு.

போரவர்ரவரென்று புலம்பிசொன்னாய்கிருஷ்ணா
புண்டரீவரைப்போலே காணேனே

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

காணேனேயென்றுசொல்லி கனமாகப்பேசுரீர்
தோணுதுமக்கிப்போ சொல்லக்கூடாதே

### பலராமர் சொல் தரு.

சொல்லக்கூடாதென்று சொன்னீரேகிஷ்ணனீர்
வல்லவரோயிந்த வாகுள்ளமுனிவரை

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வல்லவரென்றுசொல்லி வரிசையாயுரைத்தீரையா
நல்லவரென்றுநீர் தான் நாட்டினிலழைப்போமென்று
அல்லல்தான்னேருமிப்போ அருமைகள்குரையுமய்யா
சொல்லியவசனமெந்தன் துணைவரேமறந்துடீரே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் யெனது தமையனாரே யிந்த சன்னாசியை மகாவல்லவரென்று நமது பட்டணம் அழைத்துப்போவோமென்று சொன்னீர் அப்படி யிவரை அழைத்துக்கொண்டு போனால் கெடுதி சம்பவிக்கும் அந்த வார்த்தையை மறந்துவிடும் யெனது அண்ணாவே.

### பலராமர் சொல் கவி.

மறந்துடீர்யென்றுசொன்ன மன்னவாகிருஷ்ணாகேளாய்
துறந்தவர்தம்மைவிட்டு துரிதமாய்நகருக்கேகி
வனந்தனிலிருப்பதேது மவரையுமழைத்துக்கொண்டு
துரைவிடம்தன்னில்வைத்து தொழுதுநாம்வாழலாமே.

### பலராமர் சொல் வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே யிந்த சன்னாசியானவர் யில்லரத்தைவிட்டு துரவரமாகி வனத்திற்குவந்திருக்கிறவரை நாம்நேத்திரத்தினால் பார்த்துப்போவது சரியல்ல நாமவரை அழைத்துக் கொண்டுபோய் நமது பட்டணத்திலிராநின்ற மடாலயத்தில்வைத்து பிரதிதினமும் அவரைத்தொழுது வாழ்ந்திருக்கலாம் தம்பிகிருஷ்ணமூர்த்தியே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வரும்பலபத்ரராமா மன்னன்சன்னாசியர்க்கு
ஒருவர்கள் துணையேன்வாழ்வேன் உரைவிடம்தானுமென்னை
அரசர்களறவேனிப்போ அழைத்தாலும்வருவாரோதான்
தருமயோகியரேநெஞ்சம் தருதலேகருமமன்றே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளுமையா சுவாமி தமையனாரே யிந்த சன்னாசிக்கு ஒருவருடைய துணையேன் வாழ்வும் உறவும்யேன் அரசர்களுடைய தயவேன் அப்படியிருக்க அவரே நமது பட்டணத்திற்கு வாவென்று அழைத்துக்கொண்டுபோய் விட்டால் பாவத்திற்கு யிடமாவதன்றி வேறில்லை தமையனாரே.

பலராமர் சொல் கவி.

கருமங்களென்றுசொன்ன கண்ணனைக்கண்ணால்நோக்கி
திருபலபத்ரராமன் சினத்துடன்மகிழ்ந்துசொல்வார்
ஒருவரும்துணையில்வாடி உரங்களுமுறைமையல்ல
பழியதுநேராமற்றுன் பட்டணமேகுவோமே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பலராமர் கிருஷ்ணமூர்த்திசொன்ன வார்த்தையைக் கேளாமல் மனமகிழ்ந்து சன்னாசியாரை காட்டில் தனிமையாக விட்டுப்போகிறது முறைமையல்லவென்று மனது சந்தோஷமாக துவாரகாபுரிக்கு சன்னாசியை அழைத்துக்கொண்டு போகிறவிதங் காண்க.

பலராமர் தன்னகரத்துக்கு வருகிற தரு.

பன்னுமறையோர்கள்சூழ பலபத்ராமருடன்
மன்னவர்கள்புடைசூழ மாதரிசைபாடியாட
வர்ணமானகுடைகள்கொடி வானவர்கள்புடைசூழ
மன்னுமாமுனியும்கூட மாமுனிவர்தோன்றினரே
ஆனைப்படைதேர்கள்சூழ அவரவரதங்களேர
சேனைகளும்புரவியேக காவலனும்தோன்றினனே
யெதிர்குலத்தவர்கள்சூழ யிருபுரம்கவரிவீச
மதிகுலத்துதித்தமன்னன் மாமுனிவன்தோன்றினரே பன்

பொது கவி.

தனுமாரன்கணைபின்னைந்த தபத்துளசுபத்ரையென்னு
அனுமான அமிர்தப்பெண்ணை அனுதினம்யெண்ணியெண்ணி
மனமாய்கைகொண்டுயேங்கி மடத்தினிலிருக்கும்நாளில்
கனமாரிகாலம்வந்து காயந்ததிற்பெய்ந்தகாலே.

பொது வசனம்.

அகோ தெப்படி யென்றால் சன்னாசியாகிய அர்ச்சுனமகாராஜனை பலராமரும் கிருஷ்ணமூர்த்தியும் துவாரகாபுரியில் யிராணின்ற மடாலயத்தில் தபசியைக்கொண்டுபோய் வீற்றிருக்கின்றபோது அர்ச்சுனமகாராஜன் யென்னேரமும் சுபத்திரையை மனதில் நினைந்து

யெப்போ வருவாளோ வென்று பெண்ணே கண்ணேயென்றும் மனதில் நினைந்து யேக்கங்கொண்டு யிருக்கிறபோது ஒருநாள் மாரியானது பெயும் காலமாகி அதிகமழை வருஷிக்க அப்போது பலராமர் சொல்லுகிற விதங்காண்க.

### பலராமர் சொல் கவி.

இனிவரும்புகழும்நெஞ்சில் யிஷ்டமாகிஷ்ணுகேளாய்
கனமழைக்குளிருமுதல் காத்தினையாற்றப்போமோ
தினந்தோரும்நனையமாட்டார் செய்தொழிற்காருமில்லை
மனைதனிலழைத்துவந்து மடத்தையுந்திருத்துவோமே.

### பலராமர் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே நாம் சன்னாசியையழைத்து வந்திருக்கிறபடியினாலும் அவரை தனியாக விட்டு யிருக்கக்கூடாது அதுயென்னகாரணமென்றால் மழையானது வருஷித்து குளிர் அதிகமாயிருக்கிறபடியால் அவரை நம்முடைய யில்லரமாகிய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வந்து சவரக்ஷணைசெய்ய வேண்டும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மடத்திலிருப்பவரை அண்ணாவேசமது
மனையிலழைக்கலாமோ அண்ணாவே

### பலராமர் சொல் தரு.

வேண்டாமென்றேயுரைத்தால் சன்னாசியவருமே
மெலிந்துமயங்குவாரே கிருஷ்ணதேவா

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மயங்குவாரென்றுசொன்னீர் அண்ணாவேநீர்
வாதுசெய்யாதே போமையா

### பலராமர் சொல் தரு.

வாதுதானேதுக்கடா சன்னாசியவர் ஒரு
வார்த்தைசொன்னால்பாபம் நேருமோடா

### கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பாபங்கள்நேராதையா சன்னாசியவர்
பயித்தியக்காரனையா அண்ணாவே

### பலராமர் சொல் தரு

பயித்தியக்காரனென்றாய் சன்னாசியவர்
பரிதேசியல்லவோதான் கிருஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பாதேசியென்றுசொன்னீர் அவனுமெத்த
பாரசமுசாரி அய்யா

பலராமர் சொல் தரு

சமுசாரியல்லவடா கோபாலகிருஷ்ண
சல்தியாயழைப்போம் வாடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அழைப்போமென்றேவசனம் யெங்களண்ணாவே
அடியேனுக் காகாதையா

பலராமர் சொல் தரு.

ஆகாதுயென்றுசொல்லு பெரியவரை
அகந்தைகள் செய்யாதடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு

அகந்தைகள்நேருமையா சன்னாசியவர்
அரண்மனைக் கூடாதையா

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

மூட்டியவில்லுமன்ன மூர்க்கர்சன்னாசியாரை
காட்டினிலிருந்தன்னாளில் கண்டுநீர்கொண்டுவந்து
நாட்டினில்மடமுங்கட்டி நடத்துதல்போதாதென்று
வீட்டினிலழைப்போமென்றீர் வேண்டுதல்செய்குவீரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்

கேளுமையா தமையனாரே கானகத்தில் திரியப்பட்ட சன்னாசியைக் கொண்டுவந்து நமது நாட்டில் மடாலயங்கட்டிவைத்து அந்த மடத்தில் சுகமாகயிருக்கின்ற சன்னாசியை வீட்டிற்க்கு அழைத்துக் கொண்டு வந்து வைத்தால் அபகீர்த்திக்கிடமாகும் ஆகையால் யிந்த வார்த்தையை மறந்துவிடும் அண்ணாவே.

பலராமர் சொல் தரு.

யெதிர்த்துவார்த்தைகள்சொல்லி கிருஷ்ணாயிந்த
யெடக்குகள் பேசாதடா
யின்பங்களித்துநீ துன்பமாய்பேசாதடா
கோபாலகிருஷ்ணா யெதிர்த்து

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

துடுக்குப்பேசாதேயென்று சுருக்காகப்பேசுநீர்
அடுக்காதுநமக்கிது ஆகக்குப்பழிப்பாகும்
துடிக்காதே போம்போமையா

துடிக்காதே போம்போமையா
யெனது அண்ணா துடுக்குப்பேசாதே

பலராமர் சொல்-தரு.

போம்போமென்றுசொல்லி யெந்தனுக்கிப்போ
புத்திசொல்கிறா யென்னடா
புத்திசொல்கிறாயெந்தன் பத்திவிஸ்வாசங்கள்
சற்றுமரியாயோடா தம்பிகிஷ்ணா-போம்

கிருஷ்ணமூர்த்தி. சொல்-தரு.

அரியாயோயென்றுதான் யெந்தனையிப்போ
ஆகாத்தியம் பேசுகிறீர்
ஆகாத்தியம்வருமிந்த ஆண்டியினாலிப்போ
அழைப்பிக்கப் போகாதையா-அரியா

பலராமர் சொல்-தரு.

ஆகாதுவென்றுசொல்லி தபசியையீமெத்த
அழும்புகள் செய்யாதடா
அழும்புகள்பேசினால் அரசழிந்திடுமிப்போ
பழியேற்றுக் கொள்ளாதடா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

பழிமெத்தவருமென்று யெங்களண்ணா
பயந்தீரோ சன்னாசிக்கி
முழுதுமூடவெந்த முகத்தின்முன்னாகாது
மோசங்கள் ஆகுமையா-பழிமெத்

பலராமர் சொல்-கவி.

செப்பெரும்யெனதுதம்பி சிறுபிள்ளைவிளையாட்டல்ல
யிப்புவிநன்மைதீமை யெவைகளுமரியமாட்டாய்
சொற்பெரியிவரைப்போலே தூரந்தவர்கண்டதுண்டோ
அர்ப்பமாய்சொல்லும்வார்த்தை யிப்புவில்தருமந்தானோ.

பலராமர் சொல்-வசனம்.

கேளும்தம்பி கிருஷ்ணமூர்த்தியே யிந்தசன்னாசியாரை நமது அரண்மனையில் கொண்டுவந்து வைப்போமென்றால் நீ அதைக்கேளாமல் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறாய்யிப்பிரபஞ்சத்தில் வழங்கிவருகிற நன்மைதீமைகளை நீயரியமாட்டாய் ஆகிலும்யிந்த பெரியவரைப்போலே யெங்கேயாகிலும் கண்டதுண்டோ ஆகையால் அவர் யெல்லாவிருப்பங்களையும் நீக்கி யில்லறத்தைவிட்டு துறவறமடைந்த மகாபெரியவரை மனதுநோகச்சொல்லுவது உனக்கு தர்மந்தானோ சொல்லும் தம்பி கிருஷ்ணா.

### கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி.

நல்லசங்கீதமேளம் நாடகசாலைமேடை
மல்லிகைசுகந்தம்வாசம் மருவுநம்மனையில்வாழ்க்கை
யில்லினிலவரைவைத்தால் யிருப்பரோவிருப்பமன்றி
வெல்லாம்தரித்தராமா மேல்வரும்கருமமம்சொன்னேன்

### கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளும் யெனது அண்ணாவே நமது அரண்மனையில்நல்லசுகந்தமானவாசனைகளும் சங்கீதமேளவாத்தியம் சப்தித்துக் கொண்டிருக்குமிடத்தில் தபயோகியாகியசன்னாசியைக்கொண்டுவந்துவைத்தால் அவரிருப்பதற்கு விருப்பம்நேரிடும் யெல்லாம் துறந்தவர் அரண்மனையிலிருக்கமாட்டார் ஆகையால் பின்னால்வரும் அபகீர்த்தியை யிப்போது சொன்னேன் தெரிந்துக்கொள்ளும் அண்ணாவே.

### பலராமர் சொல்-கவி.

சொன்னதுபோதுங்கிருஷ்ணா சொல்லைநீசொல்லவேண்டாம்
பொன்னுமண்ணாசைவிட்ட பெரியவராகுமன்றோ
சன்னாசியாருக்கேத்த தாக்ஷியுமெங்குமோங்கும்
மன்றுமோர்மனையில்வைத்து வாழலாம்வாராய்தம்பி.

### பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே யிப்போது சொல்லியவார்த்தையைப்போல் யினியொருதரம் சொல்லவேண்டாம் பொன் பொருள் மண்ணாசையை விட்டுவந்த பெரியோராகிய சன்னியாசியாருக்கு நாம் உதவிசெய்தால் தாக்ஷிவரமாட்டாது அவரை நமது அரண்மனையிலிருத்திவைத்து நாம் சந்தோஷமாக வாழ்ந்திருக்கலாம் அகோவாருமையா சன்னியாசியே நமது அரண்மனைக்கு யெழுந்தருளும் சுவாமி சன்னாசியே.

### கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

ஆ ஆ கேளும் கேளும் ஓய் சன்னாசியாரே வருகிறநஷ்டம் யெனக்கு அக்கரையில்லை ஆனால் யெங்களுடைய அரண்மனைக்கு யெழுந்தருளும் சுவாமிசன்னாசியே.

### பலராமர் சொல்-ஜம்பை-தரு.

வாடைகுளிர்மழைகாத்தும் வாசமல்லவாசமல்லை
வீடுதனில்மடமுமுண்டு விரைவுடனேவாரும்
நந்தவனம்சாலைவாவி நல்லவகையெல்லாமுண்டு
விந்தையுள்ளமடம்தனக்கு மெள்ளவருவீரே

பிச்சையிடுவாருமுண்டு / பேச்சுத்துணைவேணருண்டு
மெச்சிடவேமச்சியுண்டு / மெள்ளயெழுந்தருளுமையா

பலராமர் சொல் வசனம்.

அகோவாருமையா சுவாமி சன்னாசியாரே நீர் யிந்தப்பனியிலும் ஊதலில் ஒண்டியாகயிருந்து கஸ்திப்பட வேண்டாம் ஆகையால் நம்மிடயில்லறமாகிய அரண்மனைக்குப் போவோம் யெழுந்தருளுமையாசன்னாசியாரே.

அர்ச்சுனன் விடுதிக்குவருகிற தரு.

ஆண்டிக்கிவனாகி / அம்மாபிக்ஷையென்றுசொல்லி
வேண்டியேசுபத்ரைபெண்ணை / விரும்பிவிரும்பிக்கொண்டு
தெண்டுடன்கமண்டலமும் / ஜெயதபமந்ரம்பேசி
கள்ளசன்னாசியாருங் / காணவேதோன்றினாரே ஆண்டி

பலராமர் சொல் கவி.

இருந்தசன்னாசியாருக் கேவியேவேலைசெய்ய
பொருந்தியேநன்றாயத்தப் புரத்துள்ளோரொருத்தாக
மருந்தேனும்மொழியாளான வாவினேர்விழியினாளை
துரந்த்ரபிருத்தபெண்ணை சுபத்திரைதனையழைப்பாய்

பலராமர் சொல் வசனம்.

அகோவாரும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே சன்னாசியாயிருக்கும் அடியவருக்கு பிரதினமும் பணிவிடைவேலை செய்யவேண்டும் ஆதலால் நமது தங்கையாகிய சுபத்ரையம்மனை அதிக சீக்கிரம் அழைப்பியும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அழைப்பிக்கவேண்டுமென்றீர் / சுபத்திரையை
அவரிடத்தில் / விடலாமோ

பலராமர் சொல் தரு.

அவரிடத்தில்விட்டாலென்ன / கோபாலகிருஷ்ணா
அட்டிசொல்லாதே / போடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பேசாதேயென்றுசொன்னீர் / சுபத்திரையாள்
பெண்புத்தியைநீர் / அறிவீரோ

பலராமர் சொல் தரு.

அறிவீரோவென்றுசொன்னீர் / கோபாலகிருஷ்ணா
அருமைசன்னாசி / யவர்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சன்னாசிமார்க்குமெல்லாம் / யெங்களண்ணாவே
தானறியப் / போகாதையா

பலராமர் சொல் தரு.

வின்னாணக்காரனடா கோபாலகிருஷ்ணா
வீணானவார்த்தை சொல்கிறாய்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பெண்ணாள்சுபத்திரையை சன்னாசிகண்டால்
போராசைக் கொள்வாரையா

பலராமர் சொல் தரு.

பெண்ணாசைமண்ணாசை பொன்னினாசைவிட்ட
பொய்யாததபசி யிவர்தான்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தபசியென்றேயழைத்தீர் அண்ணாவே
தரணியோர்க் கடுக்குமோதான்

பலராமர் சொல் தரு.

அடுக்காதென்றுசொன்னீர் பெரியவரை
அபவார்த்தை பேசாதடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அபவார்த்தைநேருமையா சன்னாசியாலே
அரசர்கள் பழிப்பாரே

பலராமர் சொல் தரு.

பழிமெத்தவாராதடா சுபத்திரையை
பாங்காயழைத்து வாடா

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

காசினிபுகழும்ராமா காடு போய்நாளாய்விட்டால்
போஜனம்நெய்பாலாகி பூஞ்சோலையிருக்குமாகில்
பேசியேதுடையும்கைகால் பிடிப்பதுபெண்ணுமானால்
தேசமேயரியநாளை சிரிப்புக்குவிடமதாச்சே

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும்யென்தமயனாரே கானகத்தில்சஞ்சரிக்கும்சன்னாசியைக்கொண்டுவந்து வீட்டில்வைத்து நெய்பாலுடன் சாப்பிடவுமாய்விட்டது அவன்கைகால் பிடிப்பதற்கு பெண்ணாகிவிட்டது யிந்த வார்த்தைகளை தேசத்தில் தெரிந்தால் நகைப்பு யிடமுண்டாகும் தமையனாரே.

பலராமர் சொல் கவி.

ஆகுமென்றுரைத்தாய்கிருஷ்ணா அவைகளைநினைத்தாயல்லால்
யோகியர்மனமும்வாக்கும் உரைகளுமறிந்ததில்லை
நாகமேல்பாந்தாய்பூமி நடுங்கவென்றுரைத்தாயிப்போ
தோகையாளமுர்தப்பெண்ணை சுபத்திரையழைப்பிப்பாயே.

பலராமர் சொல் வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே அபகீர்த்தியானவார்த்தைகளை நினைத்தாயேதவிர யோகியாகயிருக்கப்பட்டவருடைய மனதில்யிருக்கும் உண்மைவாக்கியங்களை நீயறிந்தில்லையோ ஆகையாலிந்த பூமியாத்தியந்தமும் நடுங்கும்படியாக நீர்யிப்போது சொன்னவார்த்தைசரியல்ல அம்படிக்கெல்லாம் குறைவுவரமாட்டாது நமதுதங்கையாகிய சுபத்திரையம்மனை அழைத்துவாரும்தம்பிகிருஷ்ணமூர்த்தியே

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

யெத்தனைசொன்னாலும் மூந்தன்
சித்தமதிற் கேழ்க்கலியே-ராமா-பலராமா

பலராமர் சொல் தரு.

குற்றமற்ற சன்னாசிமேல்
யித்தனைகெழுப் பென்னடா-கிஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வேஷத்தைநீர் பார்த்தவுடன்
மெய்யென்று மலைக்குறீரே-ராமா-பலராமா

பலராமர் சொல் தரு.

யென்னாலும் உந்தனிட
யிடக்குகள் போரதில்லை-கிருஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சொன்னால் தெரியாதிப்போ
பின்னால் தெரியப்போகும்-ராமா-பல

பலராமர் சொல் தரு.

இந்தசன் னாசியின்மேல்
யெவர்கள் பழுதுரைப்பார்-கிஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

உந்தனுக்கரியச் சொன்னால்
உம்பர்க்கதிக மென்தீர்-ராமா-பலராமா

பலராமர் சொல் தரு.

யென்னடா கோபாலா
யிப்படி மரிக்கலமோ-கிஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

யென்னியே சுபத்திரைதன்னை
யிழந்துவிடுவீர் சொன்னேன்-ராமா-பலராமா

பலராமர் சொல் தரு.

போனாலும் போருனிந்த
பெரியவர் பழிநமக்கேன்-கிஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்திசொல்-தரு.

ஆனால்யிவனால் வந்த
அவதிக்கு நானிருக்கேன்.ராமா-பலராமா

பலராமர் சொல் கவி.


இருக்கேனாமென்றுசொல்லி யிடர்வழக்குரைத்தாய்கிருஷ்ணா
வருத்தம்நீபடவும்வேண்டா வரும்பழிநானேகொள்வேன்
நறுமலர்புஷ்பஞ்சூடும் நங்கையென்தங்கைதன்னை
வருகவேபாருய்கிருஷ்ணா மனமகிழ்ந்தழைப்பாய்தம்பி.

பலராமர்சொல் வசனம்.

அகோவாரும்தம்பி கிருஷ்ணா யிந்த சன்னதியாலே வரப்பட்ட துன்பத்தை நானே கைக்கொள்ளுகிறேன் நீ சந்தேகப்படாமல் தங்கையாகிய சுபத்திரையம்மனை யழைப்பியும் தம்பி கிருஷ்ணா.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் சுபத்திரையம்ம னானவள் தமையனாகிய பலராம ரழைத்தாரென்று கிருஷ்ணமூர்த்தி சொல்லக் கேட்டு தமையனைக்காணும்படி சுபத்திரையம்மன் சபைக்குவருகிற விதங்காண்க.



சுபத்திரை வருகிற கவி.

இந்திராணாங்கிசீதை ரதியருந்ததிஇந்ராணி
சந்திரமதியான்ரம்பை தமயந்திசத்யபாமா
அந்திரதேவர்ப்பெண்கள் அனைவர்க்குமழகின்மிக்க
சுந்திரமயில்போலொற்ற சுபத்திரைவருகின்றாளே.

### சுபத்திரைவருகிற தரு

வந்தாள்சுபத்ரைப்பெண்பாரீர் ஒய்யாரமாக
வாறாள்சுபத்ரைப்பெண்பாரீர்

விளையாடும்கன்னிகையாள் மதன்ரதியைப்போலே
விளையாடியேமாது மெள்ளசபைக்குவாராள்-வந்தாள்

சிங்காரக்கொங்கைமீதில் செம்பொன்மணியுமாட
சங்கீதம்பெண்கள்பாட சரசமோகினிபோல-வந்தாள்

திகழுயெவருங்காண சிரித்துசிரித்துக்கொண்டு
சொகுசுமிஞ்சியேபேசி சுபத்திரைவருகிறாள்-வந்தாள்

முத்துகள்பளபளென்ன முகத்தில்திலர்தமின்ன
சித்திரப்பதுமைபோலே சேயிழைவருகிறாள்-வந்தாள்

### பொது-கவி.

வந்தாள்சபையில்நின்று மங்கையாள்சுபத்திரைமாது
கந்தனுக்குகமையான கரியகோபாலர்தம்மை
சிந்தையில்மகிழ்ச்சியாக சீருள்ள தமையன்மாரை
சுந்திரமயிலைப்போல தொழுதுநின்றேதுசொல்வாள்.

### பொது-வசனம்.

இவ்விதமாக சுபத்திரையம்மன் சபையில் பூரணச்சந்திரன் வீற்றிரானின்றதமயன்மார்களாகிய பலராமர் கிருஷ்ணமூர்த்தியிவர்களைக்கண்டு துதிசெய்கிற விதங்காண்க.

### சுபத்திரைசொல்-தரு.

சரணம்சரணமையா தமயன்மாரே
சரணம்சரணமையா

சரணம்சரணமையா தாயும்தந்தையைப்போல்
பரிவாய்வளர்த்தெடுத்த பலபத்ராமரே சரணம்

கொஞ்சவயதிலென்னை கோதாட்டிசீராட்டியிப்போ
கிஞ்சுகம்போலேயென்னை கொஞ்சிவளர்த்தராமா சரணம்

பாலும்பழமுந்தந்து பாராட்டிசீராட்டி
சீலமுடன்வளர்த்த தேசிகாஉத்தன்பாதம் சரணம்

பூசை அரிபூசைகளை முடித்து போஜனமரிந்தினபின் சூரியன் அஸ்தமானமாகி கங்குலடைய சன்னாசியானவர் தான்வைத்திருந்த புலித்தோலாசனத்தில் சயனித்துக்கொண்டு தன்னுடைய அஸ்தம் கைகால் முதலானதை பிடிக்கும்படி சுபத்திரையம்மனுக்கு கட்டளை யிட்ட சுபத்திரையம்மன் சன்யாசிக்கு தூக்கம்வரும்படி கைகால் பிடிக்கிறவிதங் காண்க.

### சுபத்திரை கைகால் பிடிக்கிற-தரு.

விமலர்க்குச்சரியான    மெய்யன்சன்னாசியர்க்கு
கமலக்கரத்தினாலே    கால்பிடிப்பேனே
அமலர்க்குசரியான    அய்யன்சன்னாசியற்கு
கமலக்கரத்தினாலே    கால்பிடிப்பேனே
அரிபூசைமறவாத    அய்யன்சன்னாசியர்க்கு
கமலக்கரத்தினாலே    கால்பிடிப்பேனே
அரிபூசைமறவாத    அய்யன்சன்னாசியற்கு
பரிவுயென்கரத்தினால்    பாதந்தனைபிடிப்பேன்
கர்த்தன் திருவடியில்    மெத்தமனம்வைத்தவற்கு
பக்தியுடனேபாதம்    பூசைகள்செய்தேன்
மன்மதனை துரந்த    மாயசன்னாசியற்கு
யென்கரம்வினைகள்போக்க    கால்பிடிப்பேனே
மையல்விரகமென்னும்    மாய்கைதனையொழித்த
அய்யன்சன்னாசியர்க்கு    அடிபணிவேனே-விமர்

### சன்னாசிசொல் கவி.

வருடியபொழுதேகாமன் வளைத்துடல் துளைத்துக்கொல்ல
இருடியும்விரகமாகி யெண்ணாதுமெண்ணியெண்ணி
அருகினிலிருந்தால்மோகம் அடங்குமோ அடங்காதென்று
பெருகியசுபத்ரைதன்னை போவென்று அனுப்பினாரே.

### சன்னாசிசொல்-வசனம்.

அகோவாரும் பெண்ணே சுபத்திரா நீவந்துவெகு தேசகாலமாகின்றது உன்னுடைய யெதாஸ்தானம்போய் சேரும் சுபத்திரா.

### சுபத்திரையின் விடுதிபோகும் தரு.

சன்னாசியார்போமென்று    சொன்னபின்பு
சமுத்துள்ள சுகத்தையும்    தானடந்தாள்
பொன்னும்பணிகளெல்லாம்    பளபளென்ன-நல்ல
பொற்கொடிசுபத்திரையும்    தானடந்தாள்

கன்னியர்க்கவுரி ஆல வட்டம்வீசவே
காரிழைசுபத்திரையும் தானடந்தாள்
உன்னிதமானவிடை தளதளவென்ன
உயர்குலசுபத்திரையும் தானடந்தாள்
வாடைப்பரிமளங்கள் கெந்தம்வீச
மங்கையர்மங்களங்கள் பாடியாட
மேடையில்சுபத்திரைப்பெண் தானெழுந்து
மெல்லியருடனே அந்தப் புரம்நடந்தாள் சன்னதி

பொது கவி.

நடந்தபின்கிடந்த சன்நாசியாராசையாலே
படந்தனையொழித்துபூங்கா வனந்தனிலுறங்கியேங்கி
தடந்தனில்தர்க்காலத்தி சந்திரனைப்பார்த்துப்பார்த்து
உடனிருந்தவனும்வேலை உறங்கினான் கலங்குநானே.

பொது வசனம்.

சுபத்ரையம்மன் யெதாஸ்தானம் சென்றபிறகு அர்ச்சுனருசன் சுபத்ரையின்பேரில் மையலாகி மடத்தைவிட்டு பூங்காவனம் போய் யேங்கியேங்கி நித்ரையில்லாமல் வெகுநேரம் சுபத்திரையின்மேல் யெண்ணங்கொண்டபடியே தூங்கியெழுந்திருந்து அர்ச்சுனன் சுபத்திரையை நினைந்து புலம்புகிற விதங்காண்க.

அர்ச்சுனன் சன்னதி புலம்பல் தரு.

யென்னசெய்வேன் நானென்னசெய்வேன்
யேதுசெய்வேன் விதிவசமே
அய்யய்யோநான் யென்னசெய்வேன்
ஆதிரங்க நாயகரே
அய்யய்யோமன்மதன் ஐந்துகணைபூட்டியே
ஆருகியெந்தநுடல் நீறுநீறுகவே
சேராமலேவிரைய யெய்யுரான்
மன்மதன்யெரியுரான் அய்யய்யோ-யென்ன

வாதுசெய்யும் பாவிமன்மதன்
மாமலரின்கணை யெய்யுரான்
மாதவனேகேசவனே வைகுந்தவாசவனே
வடமலைப்பூண்ட திரு வாசமணிமார்போனே
யாதவனந்தன அரிகரி யெந்தன்மேல்யெரியுரானே- அய்யய்யோ

மைவிழியாள்சுபத்திரையும் வந்துயெந்தனருகிருந்தால்
தையலரைவிட்டுநானும் தனியாகநின்று
சதிரானமோகந்தீராமல் மெய்யெல்லாம்நீராக
வெந்துதணலாகுரேன் நானும்
வேகுரேன்நோகுரேன் சாகுரேனைய்யயோ யென்
வர்ண்ணவானக்கோகிலமே யென்மேல்
வாதுசெய்து கூவுகிரான்
அன்னனடைவஞ்சிமயல் ஆசையானேன் அவுதாணமகா
சோர்ணமொழிவார்த்தையாளும் சேர்ந்தான்மனையில்முன்னே
வர்ணக்கோகிலமேயென் வடிவுமறைந்திடும்-யென்ன

அர்ச்சுனன் சன்ஞாசிசொல் கவி.

அய்யய்யோமதனுவுந்தன் அருங்கணைமலரினாலே
பெய்யுரான்யெந்தன்மீதில் யிருந்தபெண்ணேகிவிட்டாள்
தையல்மேல்கணைதொடுத்து சதிருடன்வரவேசெய்வாய்
நையுரேன்விரகத்தாலே நானென்னசெய்வேனப்பா.

அர்ச்சுன சன்ஞாசி சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே யென்னருகிலிருந்த சுபத்திரையைக் காணோமே மன்மதன்கணை மார்பில் பட்டுருகுதே யெனக்கு விட்ட மன்மதபாணத்தை அந்த சுபத்திரையின்மேல் தொடுத்து யென்னிடம் வரச்செயலாகாதா யென்னுடலம் நையுதே யென்னசெய்வேன் தெய்வமே.

அர்ச்சுனன் சொல் தரு.

யென்னசெய்வேன் யென்னசெய்வேன்
யேதுசெய்வேன் விதிவசமோ
மன்னுங்காம விரகத்தாலே
வாசமல்ல யிதுவாசமல்ல
கூசாமலேகால்பிடித்தான்நல்குணத்துடனே வார்த்தைசொன்னாள்
ஆசையாய்மிகவுமானேன் அரியாதுபோலேபோனாள்
உரக்கமினிவாராது ஒருவாராலாகாது
பொருக்கவிடமுமில்லை பொழுதுவிடியவில்லை
சுபத்திரையென்னும்பெண்ணாள் துரியோதனர்க்காகினளோ
வியர்த்தசன்ஞாசியாக வேஷமும்காணேனையோ யென்

அர்ச்சுனன் சொல் வெண்பா.

சித்திரையும்கெட்டு நினைவுதடுமாருதே
சத்துருவாய்காமரசம் தைக்குதே மைத்தொருபெண்
அருகிருந்துவுரவாடி.

அர்ச்சுனன் சொல் தரு.

பெண்ணாசையைத்தீர்க்க யார்வருவாரோ
குயிலினங்காள் அழைத்துவாரீரோ
மயிலாளேயென்னை அழைத்துவாரீரோ
ஒயிலானபெண்ணே உனக்கெதிர்வருவாயிப்போ தரு
கலைத்திடுமுன்னே மனமொத்துதவிசெய்ய யென்று

அர்ச்சுனன் சொல் வெண்பா.

ஊழிப்பலர்கூடி ஒருருவமாகி
கோழியின்வாய்மணம் கூறுகொண்டுதோழியாரும்
சிந்தைமகிழ்ந்துவர

அர்ச்சுனன் சொல் தரு.

செய்குவாய்வதனா யெந்தனைவிட்டு
ஸ்ரீ அரிசுதனா
கிளிமொழியைச்சேர யெய்புதேமதனா
உந்தன்னேர்விழி சத்தும்கிலையாமல்
தத்திவிழுகிறாய் மெத்தவருத்துதே தரு
மயில்சுபத்திரைதன்னை வரச்செய்குவாய்மதனா செய்

பொது கவி.

இப்படிசன்னாசியிரவெல்லாம் விரகத்தாலே
வெற்பினிலுழல்வார்போலே வெதும்பியங்கிருந்துவிட்டார்
செப்பிளங்கொங்கையான தேன்மொழிவிரகமாகி
துப்புரலுருகுமேனி சுபத்திரைவருகின்றாளே.

பொது வசனம்.

இப்படி அர்ச்சுனசன்னாசி அன்றிரவெல்லாம் மன்மதன்விகாரத்தினால் வெதும்பி மதிமயங்கி சுபத்திரையின்பேரில் மயலாகியிருக்கும்போது சுபத்திரையம்மன் மையல்மீறி தாதிகளைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

சுபத்திரை புலம்பல் தரு.

யென்னசெய்குவேன் யிப்போயேதுசெய்குவேன் தெய்வமே
பூதலந்தன்னிலுள்ள மாதர்கள்தன்னைப்போலே
புருஷபாக்கிய மில்லையோ
விரகலாகிரி பருவமானால்
விரகப்பொருத் திடலாமோ
சரசமாய்வினையா சற்குணனைகான்கூட

தாவியமாலையும் காணேன்
பரிவுடன்மாலையிட அரியோதினன்வருவான்
யிச்சமயம் அர்ச்சுனன்மேல் மையலானேன்
யிளமைபொல்லாப்போ அளவில்லில்லாமல்
பழுதாகப்போகுதே தெய்வமே
களபகஸ்தூரிபூசாமல் கன்னிநின்றழுவனே

சுபத்திரை சொல் வெண்பா.

அரவமுருங்கிட்டதேர் அச்சாணி அற்றதோ
புரவிக்குஅப்புரிகிபோச்சுதே பிரவிதான்
விதியின்பயத்தினால்

சுபத்திரை சொல் தரு.

செத்தானேபாங்கி சூரியகின்னம்
தேர்விடக்காணுமே அம்மணி
பர்க்குணரைஒருநொடியில் பார்த்து அழைத்துவந்தால்
மிக்கசந்தோஷிக்க வேணபூஷணம்தாரேன் செத்தா

சுபத்திரை சொல் வெண்பா.

பொழுதுவெடியாதோ புண்டரீகம்பூக்காதோ
மாதேயென்மனத்துயரம் மாராதோ ஆதரவாய்
காண்டீபனைக்கண்டு.

சுபத்திரை சொல் தரு.

விஜயனைநான்கொள்ளு வேனே
விரகந்தீரக்கொள்ளு வேனோ
மதனவேலன்சக்கலர தேனே
யெந்தனைசேர வாரானே
வாரானேஎன்பிராணநாதன் யினியென்னசெய்வேன்
தாரார்புகழ்படைத்த தர்மர்க்கிளையகோவே விசை

சுபத்திரை சொல் வெண்பா.

மாரன் கணையதினால் மயிர் கூச்சிகொள்ளுதே
சூரியவான்கொண்டென்னை சுத்துதேபோயின்று
மகாராஜன்பார்த்தவிட மடிகையநான்காண
உபகாரம்செய்வாய் உண்மை.

இதுவும் வெண்பா.

சன்னசிவேஷமாய் தாணியுள்ளோர் தாமரிய
பெண்ணாசையாலே புறப்பட்டார்சன்னசி
தபத்தையரியேனே சாஸ்திரத்திஸ்தப்பாமல்
சுபத்திரைக் கொள்ளவந்தது.

### சுபத்திரை சொல் தரு.

தினஞ்சுகமாகவே போகமதனையிலன்
செய்வானே செய்வானே
மனஞ்சலிப்பாகவே தனஞ்செயபூபதி
வாரானே வாரானே
யிங்குள்ளமோகமும் தாகமும்சோகமும்
யெப்படிநான் சொல்லுவேன்
சங்கதியறியாத தாயும்தகப்பனும்
சத்துரு வானாரே
அன்னையும்தந்தையும் முன்னறிதெய்வமென்று
அவ்வை யுரைத்தனளே
தன்னுளம்யென்னிட தாயும்தகப்பனும்
சத்ராதியானாரே
யிச்சையில்லாதுரி யோதிரன்கொண்டுபோக
யெப்படிநான் பொறுப்பேன்
வெத்திவிஜயனும் அர்ச்சுனபூபதி
வாரானே வாரானே

### சுபத்திரை சொல் வெண்பா.

இருக்கும்சிசுபாலன் யிச்சையுள்ளகிருஷ்ணனையும்
பெருக்கமுடன்கைபிடித்தப் பெண்ணாளும்ருக்மணியின்
கன்றுவெடிதப்பொழுதே கடிகிலியென்முன்வர
யென்மனமுமின்று வெடிந்தாக்கால்.

### சுபத்திரை சொல் தரு.

மனதில்லிச்சையான மைத்துனன்மேலிச்சையானேன்
அனுகூலமாகவேனும் ஆதிநாராயணமூர்த்தி
யிச்சையானவர்மேலெல்லாம் இன்பமாயருள்தருவீரே
அச்சுதானந்தகோவிந்தா ஆதிநாராயணமூர்த்தி

### சுபத்திரை சொல் கலி.

ஆதிநாராயணாவென்றழுதுமே சுபத்ரைதானும்
பாதிராத்திரிவேளைதன்னில் பஞ்சணைமீதில் துஞ்ச
யேதுமாமறைசன்னாசி யிரவெலாமனதுநோக
வேதியர்தொழுதுபோற்ற வெடிந்ததுபொழுததானே.

### சுபத்திரை சொல் வசனம்.

அகோ வாருங்கள் பாங்கிமார்களே பொழுதுவிடிந்து நித்திரைதெளிந்து விட்டதுநாம் சன்னாசியினுடைய பணிவிடைவேலைக்கு போவோம் வாருங்கள் தோழிமார்களே.

## சுபத்திரை சொல் தரு.

தோராதசுபத்திரைப்பெண்
நேராகநதியைநோக்கி
அருணோதயவேளை தன்னில்
கருணையுள்ள துவாரகையில்
பொன்மணிபணியணிகள்
பூவையர்களிருபுரம்
கஸ்தூரிநாமமிட்டு
கன்னியரழகினில்
விஸ்தாரமானவளைக்
மேலானபெண்களுடன்

ஸ்ரீமன்நாராயணனென்று
நடந்தனளே
யெழுந்தோடி நல்ல
தீர்த்தமாடி
முத்துசூடி
விசைபாடி தோராத
வாடைபூசிநல்ல
பேசிபேசி
கைகையைவீசிநல்ல
வந்துபேசி தோராத

## சுபத்திரை சொல் வெண்பா.

ஐயா சருணம் அருமறை யோகிச்சருணம்
மெய்யா சருணம்விடமே சருணம்-மையலுருப்
பெண்ணாசையாலே பொருள்தேடிவீற்றிருக்கும்
சன்னியாரே சருணம்.

## அர்ச்சுனன் சொல் வெண்பா.

கொங்கைக்கனத்ததோ கொடியிடைத்தானொந்தோ
செங்கமலர்பாதம் இரண்டும்சிவந்ததோ-மங்கைநல்லீர்
மைப்பொழுதோமானே மயிலனையேயென்முன்
யெப்போ வந்தாயிரு.



### சுபத்திரை சொல் கவி.

இருந்திடுமென்றுசொன்ன யென்குருநாதாநீர்தான்
பொருந்தியதேசமெங்கே புண்ணியதீர்த்தங்களேது
அருந்தயமுயர்ச்சிபெற்ற அய்யனேதயவுசெய்து
வருந்திநின்றடியாளுக்கு வகையாவுரைத்திடீரே.

### சுபத்திரை சொல் வசனம்.

அகோ சருணம் சருணமையா சன்னாசியாரே உம்மைப்பார்த்தால் சன்னாசியாகத்தோன்றவில்லை ஆகையால் தங்களுடைய பட்டணம் யெது உம்முடைய நாமதேயமென்ன சொல்லவேண்டுமையா சுவாமி.

### சன்னாசி சொல் தரு.

இந்திராபுரிதன்னில் வசமாயிருந்திடும்
யென்பேர்விஜைய ரிஷிதான்
விந்தவுலகமெங்கும் பேசினான் தீர்த்தமாடி
சிந்தைமகிழ்ந்துபுண்ய ஸ்தளங்கள்திரிந்துவந்தேன் இந்தி

### சுபத்திரை சொல் தரு.

அந்தபட்டணமாளும் ஐவர்பஞ்சவர்கள்
அவரும்சுபேக்ஷம் தானோ
விந்தைதருமர்பீமர் நகுலர்சகாதேவர்
சிந்தைமகிழ்க்ஷியாய் சுகமாயிருக்குராரா அந்

### சன்னாசி சொல் தரு.

நாலுபேர்தன்னையுரைத்தாய் அர்ச்சுனன்பேரை
நாடிக்கேளாமல் மறந்தாய்
யேழையிதுவரைக்கும் விகக்ஷிசெய்தாயென்னை
வானவர்கோன்மைந்தனை மறந்துவிடுவதென்ன நானு

### சுபத்திரை சொல் தரு.

அவரேயெனக்குநாயகன் ஆதிமுதலாய்
ஆசையினன்பாய் மெலிந்தேன்
நவநீதனெனக்கு நாயகனென்றுசொல்லி
அவர்திருநாமம்சொல்ல அஞ்சிப்பயந்தேனின்று அவரே

### சுபத்திரை சொல் கவி.

ஐந்துநான்வயதுநாளாய் அவரைநான்புருஷனென்று
சந்ரசூரியர்கள்தேவர் சாக்ஷியாயிருக்கிறேன்யான்
யிந்திரன்மகனேயல்லால் யினியெவர்வேரேயுண்டோ
யெந்தனைக்கூடிநீரும் யின்பமேதருகுவீரே.

சுபத்திரை சொல் வசனம்.

அகோ சேனாமையாசுவாமி சன்னாசியே ஐவராஜாக்களில் நடுவோராகிய அர்ச்சுனமகாராஜன் யெனக்குப்புருஷனென்றும் யான் அவருக்குபாரியா ளென்றும் யென்சிந்தையில் நினைத்திருக்கின்றேன் அவருடையநாமதேயம் சொல்லப்பயந்தேன் ஆகையால் உனது நாமதேயம் விஜயரிஷியென்றும் நீர்சொன்னபடியால் அவர்நீரேயொழிய வேறில்லை யெனக்கிருக்கும் மன்மதவிகாரத்தைத்தீர்த்து ரக்ஷிக்க வேணும் சுவாமி சன்னாசியே.

சன்னாசி சொல் கவி.

பாதகிசண்டாளியிந்தப் பழிதனையென்மேல்வைத்து
ஆதியாய்பிழைக்கவந்த அழுலைதநீகெடுக்கவந்தாய்
யேதடிபெண்ணேநீதான் ரிஷியென்றுமரிந்திருந்தும்
மாதருக்கரசேயிந்த மடிமாங்காய்போடலாமோ.

சன்னாசி சொல் வசனம்.

அகோவாரும் பெண்ணே சுபத்திரா விஜயரிஷியென்னும் நாமதேயம் அர்ச்சுனனுக்கேயொழிய மருபடியாருக்குமில்லையோ நீ யிந்தமடிமாங்காயான வார்த்தைகளை சொல்லலாமோ நான் காலமெல்லாம் பொசித்திருக்கும் அன்னத்துக்கு வின்னம் செய்யவந்தாயோபடுபாவி.

சுபத்திரை சொல் தரு.

காமவிகாரத்தாலே        கலைதாங்கியுருகுரேன்
யேமாத்தவந்நீரோ        மைத்துனரே

அர்ச்சுனன் சொல் தரு.

மைத்துனனென்றுயென்னை மனதினில்யெண்ணங்கொண்டாய்
அச்சமில்லாமல்வார்த்தை        அன்பாயுரைக்கவந்தாய்

சுபத்திரை சொல் தரு.

அச்சங்களெனக்கென்ன        மைத்துனரேபோம்போம்
பக்ஷமுமாகிவந்தேன்        மைத்துனரே

அர்ச்சுனன் சொல் தரு.

பக்ஷமுமானேனென்று        பதரிவசனம்சொன்னால்
கிருஷ்ணாரியாமலுன்னை        சேரேனே

சுபத்திரை சொல் தரு.

என்னைச்சேரேனென்று        உரைத்தாய்மதனலீலா
கன்னல்வில்வளைத்து        மெய்பிரானே

அர்ச்சுனன் சொல்-தரு.

யெய்யுராவென்றுசொல்லி யென்னைமயக்கவந்தாய்
யென்கையாலுன்னை நான்தொடேனே

சுபத்திரை சொல்-தரு.

தொட்டாலுனக்குபயம் யென்னுவிஜயரூபா
அட்டியில்லாமல்சேரும் மைத்துனரே

அர்ச்சுனன் சொல்-தரு.

அட்டியில்லாமலுன்னை அணைத்தால்பலபாத்ராமர்
வெட்டியெறிந்திடுவார் யென்பிராணநாதா

சுபத்திரை சொல்-தரு.

வெட்டியெறிவாரென்று வீணுனவார்த்தைசொன்னாய்
பட்டமுனக்களிப்பார் யென்பிராணநாதா

அர்ச்சுனன் சொல்-தரு.

பட்டந்தரிப்பாரென்று பாங்காலவார்த்தைசொன்னாய்
ஒட்டாரஞ்செய்யாதடி சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

ஒட்டாரம்செய்யாதென்று ஒதிங்கினுலுமுந்தன்
கிட்டவந்துன்னைசேருவேன் யென்பிராணநாதா

அர்ச்சுனன் சொல்-தரு.

சேருவேனென்றமொழி தேனேயுரைத்தாயிப்போ
காரியமில்லையோடி சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

காரியமல்லவென்று சுசக்கிமுகத்தால்மணம்
நேருமோநோரதையா பிராணநாதா,

அர்ச்சுனன் சொல்-தரு.

மதனுமதனுவென்று மனதுமகிழ்ந்துரைத்தாயிப்போ
பதமாகஆகட்டும்போ சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

ஆகட்டுமென்னவென்று ஆலீசமெனக்கென்ன
சோகமுமானேனையா பிராணநாதா

அர்ச்சுனசன்னுசி சொல்-கவி.

சோகமுமானேனென்ற தோகையேசொல்லக்கேளாய்
மோகமேதீர்ப்பதற்கு முடிந்திடாதினியென்செய்வேன்
வாகுசேர்துரியாஜன் வந்துன்னைமணமுஞ்செய்வான்
யேகுமுன்னகர்த்தைநோக்கி யினியிங்கேதிர்க்கொணுதே.

சுபத்திரை சொல்-தரு.

யேனிதம்நீரென்னைசெய்குவீர் யிப்போ
யென்னைசோதித்துநீர் பார்க்குறீர்
நானுந்தன்வலையினில் அகப்பட்டுழல்கின்றேன்
ரஞ்சிதம்போலவே கொஞ்சியேநீர்வாரும்-யேனித

அர்ச்சுனன் சொல்-தரு.

மதிகெட்டுப்போச்சுதோசுபத்திரா யென்னை
மருகவேணுமென்று பசப்புராய்
பலபோரியயென்னை பங்கமிகவேசெய்து
அருமைதுரியனுக்கு மணவியாய்போனபின்-மதிகெ

சுபத்திரை சொல்-கவி.

மதியதுகுலைந்தேவும்மை மருகவேநினைவுகொண்டு
விதியிடவாருதன்னை வெல்லவொண்ணாது அய்யோ
அதிவிதமானவென்னை ஆள்வதுநீயேயல்லால்
மதியிலாதுரியன்வார்த்தை மகிழ்ந்துமேசடவாதய்யா.

சுபத்திரை சொல்-வசனம்.

அகோவாருமையா சன்னுசியாரே யென்னை துரியோதனனுக்கென்று சொல்லுகிறீர் யிந்தவார்த்தையானது கனவிலும் நடவாது யென்னுடைய ஆசையைதீர்த்து ரக்ஷியுமையசுவாமி காண்டீபரே.

அர்ச்சுனன் சொல்-தரு.

உன்மீதுலாணைப்படி நானுமைசன்னுசியடி
யென்மீதுலாசைகொண்டால் உன்னையிப்போ
யேசாரே வையகத்தில்
உனக்கேற்றபுருஷனடி அந்த
உன்னிதமுள்ள துரியோதனன்
வையகமிகழாதோ உன்னைப்போல
மங்கையர் யேசாரோ
தையலுன்கோத்திரத்தார் உன்னை
சஞ்சலம் சொல்லாரோ
தொண்ணூத்தாரு பத்துமேசென்ற
துவண்டகிழவனடி யிந்த
யின்னனவார்த்தையெல்லாம் விளங்காதேபெண்மயிலே-

அர்ச்சுனன் சொல்-வசனம்.

அகோவாரும் பெண்ணே சுபத்திரா யிந்த பூலோகமெல்லாம் யேகசக்ராதிபதியாக ஓர் குடையிலாளப்பட்ட துரியோதன மகாராஜன் உனக்கு கணவனாகயிருக்க நான் விடுவாசல் ஒன்றுமில்லாத

யேகாங்கியான சன்னாசியாகவிருக்கப்பட்ட யென்பேரில் அபே
க்ஷைகொண்டால் உன்னைப்போலொத்த ஸ்ரீமார்களெல்லாம் உன்
னைப்பார்த்து நகைக்கமாட்டார்களா நீ அந்த ஆசைசலையவிட்டு
அரண்மனைக்குப் போய்வாரும் சுபத்திரா.



## சுபத்திரைக்கும் அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

சுபத்திரை சொல் தரு.

வேதனையாகுதே சுவாமியெந்தன்
வெரிதீரக் கண்பாருமே

அர்ச்சுனன் சொல் தரு.

மாதவமா துனியாச்சே யென்னை
மரிவிகின்ரு னுனக் கேச்சே

சுபத்திரை சொல் தரு.

கோமானென் றுனை யரியேனோ
யென்னகுறைசெய்து பெண்பிறந்தேனோ

அர்ச்சுனன் சொல் தரு.

சக்கட்டம்பேசுராய்மாதே யெந்தன்
சாவுகாசந்தெரி யாதே

சுபத்திரை சொல் தரு.

கனத்தநினையைகற்றயோகியே யிப்போ
கண்பாருமேயுர வாகியே

அர்ச்சுனன் சொல் தரு.

உரவாடிநால்வெருமோசமே உந்தன்
அண்ணனுஞ்யென்னுயிர் நாசமே

சுபத்திரை சொல்-தரு.

யெவருமெதிர்த்தாலும்வெல்வீரே சுவாமி
நீயெங்கேகற்றாயிந்த கல்வியே

அர்ச்சுனன் சொல்-தரு.

நீயுனக்கிணையல்லவே வெகு
நிஷ்டூரவார்த்தைகள் சொல்லவே

சுபத்திரை சொல் தரு.

உன்னுணைசொல்லுறேன் சுவாமி நான்
உயிர்விடுவேன்மெத்த காமி

அர்ச்சுனன் சொல்-தரு.

உன்னுயிர்விட்டால் யெனக்கென்னசேதமோ
உனக்கும்யெனக்குயென்ன மர்மமோ
இத்தனைவிரகத்தாலே யென்னைநீசேர்வாயென்று
சற்றுமேசகிக்ககாணும் தபசியென்னலாகாது
சித்தினியாளேயுன்னை சேருவான்துரியராஜன்
மெத்தவேகுனுக்கவேண்டாம் மெல்லிநீயேகிடாயே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திரா நீயென்ன லீலாவினோதங்களைச் செய்தாலும் உன்மனதின்படி ஒருபோதும் நடவாது போடிபோடி பெண்ணே சுபத்திரா.

சுபத்திரை சொல்-தரு.

யென்னசெய்வேன்மைத்துனரே யிதங்காதோயென்னளவும்
அன்னவாகனத்தோனை அய்யனேபொருப்பானோதான்
ஒருத்தியாய்நான்பிறந்து உருகுறேன்மதனாலே
மருத்துயென்னைநீரும்சேர்ந்தால் மணமதுகுளிர்ந்துவிடும்
மைத்துனராநீரிருந்தும் மாய்கைவேஷம்கொள்ளலாமோ
சுத்தம்வைத்துயெந்தனைநீர் சேர்ந்திருக்கலாகாதோசொல்
தேவரீரிடத்தில்மவன் சேர்வென்றுநீதியோதான்
பாபமோவிதிவசமோ பிராணநாதாயென்னசெய்வேன்

சுபத்திரை சொல் வசனம்.

அகோ வாரும் மைத்துனரே நான் ஐந்துவயதுமுதல்கொண்டு யின்னின்வரைக்கும் உமக்கே பாரியாளென்றிருந்தேனே யல்லாமல் வேறில்லை தேவரீர் தயவுசெய்து யென்னுடன்சேர்ந்து ரக்ஷிக்கவேணும் மைத்துனரே.

அர்ச்சுனன் சொல் தரு.

யென்னடிபெண்ணெநீ சொன்னதும்கேழ்க்கவில்லை-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

மன்னநீவாவென்று வாய்மொழிதாரீரோ-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

வாய்மொழிகூறினால் வந்திடுமோக்ஷம்-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

காமன்விடுங்கணைக்கு கயிலாயமீடல்ல-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

அவசரத்தாலுந்தன் அறிவுமழிந்ததோ-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

யென்னால்முடியாது யினியென்னசெய்குவேன்-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

அன்னையன்விதிதப்புமோ நீசொல்வாய்-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

விதியென்னசெய்யும் மின்வேளைப்பருவகாலம்-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

வெட்கமும்மானமும் விக்குத்தவிக்குராய்-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

அக்கரையானபின் ஆகட்டுமென்குரீர்-சுவாமிநாதா

அர்ச்சுனசன்னசி சொல் வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திரா நீயென்னை வெகுசாமர்த்தியவானென்று நினைக்கவேண்டாம் நான் முஷ்டியெடுத்து ஜீவிக்குவருகிற பிராமண சன்னசியடி சுபத்திரா.

### சுபத்திரை சொல் விருத்தம்.

வாளிதொட்டவிற்றழும்பும் வில்லும்வாங்கும்
வண்ணகைத்தழும்பும் தளத்தழும்பும்திரைத்தழும்பும்
தோளிலிட்டதனிக்கட்டும் தழும்புமாரன்
சந்திரமும்குளிர்நடையும் குளிர்நிலாவும்
ஆணிலும்பின்னழகுடன்பின்னழகும்பார்க்க
அவயவங்களர்ச்சுனரும் நீயேயாகும்
நீருமரையோகியரே நின்பால்கண்டேன்
நிச்சயமாயெந்தனுக்குநிகழ்த்துவீரே.

### சுபத்திரை சொல்-வசனம்.

கேளுமையா சுவாமி தங்களுடைய அஸ்தத்திலும் தோளிலும் வித்தழும்பாகயிருக்கின்றது குளிர்ந்த சந்திரபிம்பத்தைப் போலுமிருக்கின்றதைப்பார்த்தால் அர்ச்சுனமகாராஜன் நீரே யல்லாமல் வேறில்லை ஆகையால் உன்னுடைய உண்மைகளை இன்னதென்று வெளியிட்டு சொல்ல வேண்டுமையா சுவாமி.

### அர்ச்சுனசன்னாசி சொல் விருத்தம்.

நிகழ்த்துமென்றசுபத்திரையே சொல்லக்கேளாய்
நீநினைத்ததொருவர் நினைக்கமாட்டார்
புகழ்த்திருவேஜெகமகிழ் துரியன்கேட்டந்த
புரத்தில்வந்தால் உனைக்காணபோகாதன்றே
மிகத்தனியே துவாரகையில் வசுதேவர்காண
மச்சினியுன்பிச்சையினால் மகிழ்ந்துபார்க்க
அச்சமற்றுசன்னாசியாகவந்தேன்
அர்ச்சுனனென்றுன்மனதிலறிகுவாயே.

### அர்ச்சுனன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திரா நீயென்னுடைய சகிஸ்தாரங்களை கேழ்க்கிறபடியால் நீ நினைத்தழுவதுமார்க்கம் ஒருவரும்நினைக்க மாட்டார் துரியோதனனுக்கு உன்னை விவாகம் செய்யும்படி கேட்ட விபரம் தெரிந்து நானுன்னை விவாகம் செய்துக் கொள்ளும்படியிந்த சன்னாசிரூபமெடுத்து வந்தேன் ஆகிலும் துரியோதிரன் உன்னைகலியாணம் செய்துப்போய்விட்டால் உன்னை நான் எப்போது காணப் போகிறேன் நான்தான் அர்ச்சுனமகாராஜன் பெண்ணே சுபத்திரா.

### சுபத்திரை சொல் விருத்தம்.

அர்ச்சுனனென்றபின்பு நிலைகாணாமல்
　அலைமத்தவர்மேல் ஐந்துகணையடைந்தாற்போல
பச்சயிளம்ஸ்தனம்குலுங்க துடிக்கத்திரேகம்
　பரபரக்கபரவசமாய் பதரியோடி
மச்சினரேசுகமோவென் றவர்மேல்வீழ்ந்து
　மார்போடுமாருருக மலர்க்கைப்பூட்டி
பிச்செனவேபிடித்துக்கட்டி அழுததேவி
　பெருமூச்சிவிட்டெடிரிந்து பேசினாளே.

### சுபத்திரை சொல் வசனம்.

சுபத்திரையம்மனவன் அர்ச்சுனமகாராஜனென்ற உண்மையைச்சொன்னமாத்திரத்தில் சுபத்திரையானவள் அர்ச்சுனன்பேரில் வீழ்ந்து மார்போடணைந்து முத்தமிட்டு அர்ச்சுனமகாராஜன் முகத்தைப்பார்த்து சுபத்திரையம்மன் அதிக சந்தோஷத்தோடிருக்கிறபொழுது அர்ச்சுனமகாராஜன் சுபத்திரையைப்பார்த்து சொல்லுகிறவிதங் காண்க.

### அர்ச்சுனன் சொல் விருத்தம்.

இன்றிருந்தினமுனக்கு நல்லதென்றாய்
　யெந்தனுக்குமப்படியே யிருந்தேன்கண்டாய்
முன்னிருந்தகிருஷ்ணர் பலராமர்வசு
　தேவர்முதலோரெல்லா மொன்றாய்க்கூடி
அன்றிருந்துசொற்பொருத்தம் நிமித்தியம்பார்த்து
　அரிய துரியோதினர்க்கென் றமைந்ததன்றோ
நன்றிருந்துநின்மனதுபொருந்திவந்தால்
　நாயமோயிதுவுலகில் நாயமாமோ.

### அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திரா யென்மீதில் உனக்கு யெப்படி பிரியமிருந்ததோ அதுபோல்யெனக்கு உன்மீதில் அதிகபிரியந்தான் உன் தமயன் பலராமர் துரியோதனனுக்கு உன்னைக்கொடுப்பதாக பொருத்த நிமித்தியம்பார்த்து துரியோதனனுக்கு கொடுப்பதாய் சம்மதித்து யிருந்ததாகவும் கேழ்வியாகிவந்தேன் நமது யிருவருக்கும் யிருக்கிற இஷ்டத்தைப்போல உன் தகப்பன் வசுதேவர் முத

லான யாவற்றுளுக்கும் உன்னை யெனக்குகொடுக்க சம்மதமானால் நினைத்தபடி முடியும் ஆகையால் நாமிருவரும் சம்மதிப்பது நீதி மார்க்கமல்ல போய்வாரும் பெண்ணே சுபத்திரா.



சுபத்திரைக்கும் அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

சுபத்திரை சொல் தரு.

நீதியல்லவென்றாய் நீயுநானுமிப்போ
ஜாதிமுறைமையான சம்மந்தமல்லவோ

அர்ச்சுனன் சொல் தரு.

சம்மந்தமென்றுசொல்லி நானும்நீயும்பேசிவிட்டால்
விம்முந்தமெனநானே மெச்சஉச்சிதமோ

சுபத்திரை சொல் தரு.

உச்சிதமோவென்று உரைத்தபேர்க்குகந்த
மைத்துனரேசொல்வீர் வழக்குமுறைமையுண்டோ

அர்ச்சுனன் சொல் தரு.

வழக்குமுறைமைராஜர் மணமாலைகலியாணம்
முழக்கமோபெண்ணே முடிமன்னர்க்கழகோ

சுபத்திரை சொல் தரு.

முடிமன்னர்மகிபாலர் முகூர்த்தமும்பொருத்தமும்
கடிமணமாலையும் கண்டபோதெல்லவோ

அர்ச்சுனன் சொல் தரு.

கண்டபோதேநல்ல கலியாணமாமென்று
பெண்டுகன்னைமகளுண்டு பெற்றவர்காணேன்

சுபத்திரை சொல் தரு.

பெற்றவரறியாமல் பெண்ணும் ஆணும்கூடில்
ஒத்துப்பொருந்தினவர் உலகத்திலில்லையோ

அர்ச்சுனன் தொல் தரு.

உலகத்திலுள்ளதென்று உன்னைகொண்டுபோனல்
பெலவான்துரீயனவன் பிடித்தடிப்பானே

சுபத்திரை சொல் தரு.

அடிப்பானென்றநூனைக் காளைபயப்படுமோ
யெரிக்கக்காண்டாவனம் விட்டவர்நீரல்லோ

அர்ச்சுனன் சொல் தரு.

அதிராலராசுரஷ்டம் அறுபத்திபதினென்றும்
சேனை அக்ரோணிகையை ஜெயிக்கக்கூடாதே

சுபத்திரை சொல் தரு.

ஜெயிக்கக்கூடாதோயின்று ஜெயதுரியோதினனை
தயித்தயனைவெல்ல சவுரியமில்லையோ

அர்ச்சுனன் சொல் தரு.

அஞ்சாமல்துரியோதநாதி அவர்களைவெல்லவே
வெஞ்சிலையால்மோதும் விஜயனுனல்லவே

சுபத்திரை சொல் தரு.

வீசனருனைப்பெற்ற பெனது
பாசம்வைக்காவிட்டால் பாவங்களுனைசேரும்

### அர்ச்சுனன் சொல் தரு.

பாவம்வந்தாலென்ன பழிகளுக்காளாகேன்
வீணான துரியனை வெட்டி ஜெயிக்கொண்ணாதா

### சுபத்திரை சொல் தரு.

ஜெயிக்கக்கூடுமென்ற யெதிர்குலத்தவனை
உனக்குப்பழிசுமக்கும் உயிர்விடுவேனே

### அர்ச்சுனன் சொல் கவி.

உயிர்களைவிடுவேனென்று உரைத்தபின்சுமத்ராயுந்தன்
பயமிலையறியவேண்டி பகர்ந்தனன்பயப்படாதே
அவர்விலாதமையன்தாயும் தந்தையுமரிந்தால்போதும்
துரியவன்வரினும்வாளால் துண்டிப்பேன்கண்டிப்பேனே.

### அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளும்பெண்ணே சுபத்திரா உன்னுடைய உண்மையைக்கண்டறியும்படி இவ்வார்த்தைகளை யுரைத்தேன் நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் உன்தகப்பன் தமையன்மார்கள் முதலானபேரும்யெனக்கு உன்னைக்கொடுக்க மனதுசந்தோஷம் துரியோதனன் உன்னை கலியாணம் செய்யும்படியாக வந்தால் அவனையும் அவன்சேனைகளையும் யென் கையிலிராநின்ற வாளுக்கு யிரைகொடுப்பேன் பெண்ணே சுபத்திரா.

### சுபத்திரை சொல் கவி.

கொல்லுவேனென்றபின்பு குறையெலாம்நிறைவிலக்கி
துள்ளியேமனதுபொங்கி தானுடன்புளகமாகி
வள்ளல்மிகப்பூரித்து வாயிதழ்துடிக்கயோகி
கள்வனையனுப்பிவிட்டு கடிந்தவள்நடந்தாளன்றே.

### சுபத்திரை சொல் வசனம்.

அர்ச்சுன சன்னாசியானவர் சொன்ன வார்த்தையைக்கேட்டு சுபத்திரையம்மனுக்கு திரேகம்பூரித்து துரியோதனன் தன்னைக்கலியாணம் செய்யாமுன்னம் அர்ச்சுனமகாராஜன் வந்து மாலையிடவேண்டுமென்று அந்த அர்ச்சுனர்க்கே பாரியாளாக வேண்டுமென்னும் சுபத்திரையம்மன் கடவுளைத்தியானிக்கிற விதங்காண்க.

### சுபத்திரை கடவுளை தியானிக்கும் தரு.

அகப்படுவேனோ
அர்ச்சுனன்மே
யென்தகப்பனும்
சங்கராகெங்காதரா
ஆதாவுதுரியோதனன்
அர்ச்சுனன்மே
பாதகர்அனைவர்மனம்
சங்கராகெங்காதரா
விந்தையில்மதனருபன்
விஜயன்மேலிச்சை
பெற்றதாய்தந்தைமனது
பாருங்கெங்காதரனேசங்கரனே

அரியனுக்குநானும்
விச்சையானேனே
சம்மதிக்ககிருபையாரும்
அகப்படுவேனோ
மீதில்லை
விச்சைகொண்டேன்
பிரியாமல்கிருபைபாரும்
அகப்படுவேனோ
மணிமார்பன்
கொண்டேன்
சேரவேண்டும்கிருபை
அகப்படுவேனோ

### சுபத்திரை சொல் கவி.

யென் அண்ணே சருணம் யென்னம்மாள் சருணம்.

அருள் சருணம்.

ஆயேசருணம் யென்னையன்போடுபெற்ற
தாயே சருணம்.

### சுபத்திரை சொல் வசனம்.

அரகரா மகாதேவா காலகண்ட திருநேத்திரா உலகமாதாவே ஜெகதீஸ்பரி துரியோதனன் யென்னைவந்து மணஞ்செய்யாமல் ஆனழகனை அர்ச்சுனமகாராஜன்வந்து யென்னைமாலையிடவேணும் கர்த்தனே.

### சுபத்திரை தாய்தந்தைகளுக்கு சொல் வசனம்.

சருணம் சருணம் தாய்தந்தை தமையன்மார்களே துரியோதனனுக்கு மணம் செய்துக்கொடுப்பதாய் தாங்கள் யோசித்திருக்கிறபடியால் அந்த துரியோதனனுக்குயென்னைமணஞ்செய்வதுசரியல்ல தாய் தந்தை தமையன்மார்களே.

### அசோதை சொல் கவி.

சருணம்செய்தமயிலேகேளாய் தவத்துள்ளசுபத்ரையாளே
அருவகைப்புதுமையான அதிசயம்கண்டதுண்டோ

கருதிநேர்ந்திந்தபெண்கள் கணவனையரினிணுப்போல்
பெருகியவருத்தமேது பேசுவாய்பேசுவாயே.

அசோதை சொல் வசனம்.

அகோவாரும்மா சுபத்திரா யித்தனைநாளாய்ப் பார்க்கினும் யின்றையதினம் உன்முகம் செந்தாமரைப் புஷ்பம்போல் யிருக்கப் பட்டமுகமானது வேருபட்டு யிருக்கவேண்டியதென்ன சொல்லு மம்மான்தாயே சுபத்திரா.

சுபத்திரை சொல் கவி.

பேசுமென்றென்னைப்பெண்ணாய் பெற்றதாயாரேகேளீர்
தேசுள்ளசன்னியாசி செஞ்சிலைவிஜயனாகும்
வாசமாய்கிலைசளிந்த வண்ணிலேயென்னைக்காண
ஆசையுள்ளவர்களானார் அவர்க்கென்னையருளுவீரே.

சுபத்திரை சொல் வசனம்.

கேளும் யெனது தாய்தந்தையே யிதோசன்னியாசியாக வந்திருப் பவர்விஜயபூபதியாகும் அவருக்குயென்னைவிவாகம் செய்துவைக்கும் படி கிருபைசெய்யவேண்டும் தந்தையே.

அசோதை சொல்-கவி.

அருமைசன்னியாசியான அவன்றனையின்றறிந்த
குருகுலனிந்தவேஷம் கொண்டது யிதர்க்குண்டான
வருமையால்வசுதேவர்க்கும் வெனக்குமப்படியேகண்டாய்
மருமலர்யிதுவேயெண்ணம் மற்றவர்க்கேற்பிடாதே.

அசோதை சொல் வசனம்.

கேளுமம்மாசுபத்திரா அந்தசன்னியாசியான அந்த அர்ச்சுனமகா ராஜனுக்கு உன்னைவிவாகம் செய்துகொடுக்க யெங்களுக்குசம்மதந் தான் யின்னம் யிருப்பவர்களுக்கும் உன்தமையன் பலராமர்கிருஷ் ணமூர்த்திக்கும் இவ்வார்த்தை யேர்க்காதம்மாதாயே சுபத்திரா.

சுபத்திரை சொல் தரு.

மைத்துனோர்களிய    மனமதுவேனுமென்ன
மாதாவேசொல்லுவேன்    கேள்
மாதாபிதாவினு    மனதுகளொத்திருந்தால்
சேதங்கள்    வாராதுதடி மைத்

### அசோதை சொல் தரு.

வாராதடியென் சுபத்திராசீ
மனமதுமகிழ்ந்து சொன்னாய்
பேர்புகழான பூபாவர்ணம்சென்ற
பலராமர்க்கென்று சொல்வேன் வாராதடி

### சுபத்திரை சொல் தரு.

சொல்வதென்னடி தாயே யென்மனதுக்கு
சரியல்ல துரியோதனன்
சரியல்ல அவனென்னை தழுவிசுகமளிக்க
தகாதுதகாதுசொன்னேன் அன்னையே சொல்ல
அம்மணியென்றுசொல்வீ யென்மகளே
அறிவழிந் தேதுசொன்னாய்
உண்மைதான்சொல்லுகிறேன் உன்னண்ணன்மாரிப்போ
உரைக்கின்றால் யேதுசெய்வோம் அம்மணி

### சுபத்திரைசொல் கவி.

மைத்துனோரறியவேண்டாம் வனமணிகிருஷ்ண தேவர்
சற்றுமேயறிந்தால்போதும் சகலகாரியமும்கூடும்
உத்தம அருளிநீங்கள் ஒருமிக்கயீன்றெடுத்தீர்
அத்தன்போல்வந்தமன்னன் அவனைநான் மணஞ்செய்வேனே

### சுபத்திரை சொல் வசனம்.

கேளும் யெனதுதாயே அந்த சன்னாசி யென்னை மாலையிடுவதற்கு வேறொருவருக்கும் தெரிவிக்கவேண்டியதில்லை யென்தமையனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யறிந்தால்போதும் அவர் மனம் வைத்தால் சகலகாரியங்களும் கைவல்யமாகுமேயன்றி வேறில்லை உத்தமமான வார்த்தையைச் சொன்னேன் அதுவுமன்றியில் யென்னையீன்றெடுத்த அன்னையே அத்தாளுகிய பரமசிவத்தைப்போல வந்திருக்கும் அந்த அர்ச்சுனசன்னாசியை மாலையிடுவேனேயல்லாமல் வேறொருவரை மாலையிடேன் யெனது மாதாவே.

### பொது வசனம்.

இந்தப்பிரகாரம் தேவகியம்மனும் சுபத்திரையம்மனும் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் தாயாரண்டை சொல்லுகிற விதங் காண்க.

### கிருஷ்ணமூர்த்தி சொல்கிற கவி.

மருவியமுலைப்பால்தந்து வளர்த்தமாதாவேபோற்றி
தாளமாந்தொட்டிலிட்டு தாலாட்டுந்தாயேபோற்றி
துரைதிரியோதினர்க்கென் சொல்லேலாலெழுதினாங்கள்
துலாமதில்சுபத்திரைக்கு சோபனம்நாளையம்மா.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

என்னை அன்போடு அமூர்தம்கொடுத்து தொட்டிலில் வைத்து தாலாட்டி வளர்த்த யெனது அன்னையே அஸ்தினா புரியையாளும் துரியோதன மகாராஜனுக்கு யென்தங்கையாகிய சுபத்திரையைபாணிக்கிரணஞ்செய்து போகும்படி நிரூபம் யெழுதினேம் சுபத்திரையம்மனுக்குநாளையதினம் முகூர்த்தம் நடப்பது நிச்சயமம்மாதாயே மாதாவே.

### பொது கலிப்பா.

செழுந்தாமரைக்கண்ணன்மாயோன் சுபத்திரைதேசமன்னர்
தொழுதாதாளுடையதிரியோதனர்க் கென்றுசொன்னபின்பு
விழுந்தான்விராலெரித்தான் துடித்துடல்விம்பிவிம்மி
யெழுந்தாளுடனேயிருந்தாள் மனமதுயேங்கினளே.

### பொது வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவர் சுபத்திரையை துரியோதனன் நாளையதினம் வந்து கலியாணம்செய்துக் கொள்ளப்போகிறுனென்று சொன்ன வார்த்தையைக்கேட்டு துடிதுடித்து உடல் பதைத்து அதிக வருத்தமாக பூமியில் மூர்ச்சித்துவிழுந்து யிருக்கும்போது கிருஷ்ணமூர்த்தி சொல்கிறவிதங் காண்க.

### கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

யேங்கியசுபத்ரை தன்னை யெதிர்குலாயிருகையாலே
தாங்கியேமடிமேல்வைத்து தடங்கண்ணீர்துடைத்துத்தேற்றி

இயங்கியேமூர்ச்சையாகி யிருவிழியருவிச்சேர
நீங்குகன்யேதோவம்மா செப்புவாய்தாயேயென்றார்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

இவ்விதமாக சுபத்திரையம்மனை ஸ்ரீகிருஷ்ணதேவர் வாரியெடுத்து தன்மடிமேல்வைத்து ஆறுபோல் கண்களில் சலமானது தாரை தாரையாக வருவதைத்துடைத்து முத்தமிட்டு மூர்ச்சை தெளிந்த பிறகு தாயாரைப்பார்த்து சுபத்திரையம்மன் யேன் மூர்ச்சித்ததென்றுகேழ்க்க தேவகியம்மன் சொல்லுகிறவிதங் காண்க.

தேவகி சொல் கவி.

தேவர்கள்புகழும்கிருஷ்ணா திருத்தொண்டுசன்னாசியானோர்
காவலன்விஜயனென்று கண்டுமேமையல்கொண்டாள்
பூவைமாமயின்காந்தாரி புதல்வர்க்குவுதவிசெய்தால்
சாவனென்றுரைத்தாள்கிருஷ்ணா ஊதயலென்செய்வேனப்பா.

தேவகி சொல் வசனம்.

கேளும் கிருஷ்ணா நமது அரண்மனையில் வந்திருக்கும் விஜயசன்னாசியைக்கண்டு மையல்கொண்டாள் திரியோதனனுக்கு தன்னை மணஞ் செய்வித்தால் தன்னுயிரை விடுவேனென்று ஒரேயுறுதியாகச் சொல்லுகிறாள் அதற்கு நானென்ன செய்வேனப்பா கிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

செய்வதேதென்றுரைத்த தேவகிதாயேகேளாய்
அய்வரில்ஒருவனான அர்ச்சுனன்தனக்குதன்னை
மைவிழியானமாதை வதுவைசெய்திடுவோமிப்போ
தையல்யென் தங்கையானை தன்மனம்தெளிவிப்பாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளுமம்மாதாயே ஐவர்ராஜாக்களில் ஒருவனாகிய அர்ச்சுனமகாராஜனுக்கு தங்கையாகி சுபத்திரையை கலியாணஞ்செய்து வைப்போம் தங்கையின்மனதைதேத்தி தைரியம்சொல்லுமம்மா தாயே மாதாவே.

பொது கவி.

இப்படிசொல்லிவிக்க யெம்பெருமானுமப்போ
தப்பிலாதமையன்கூட தன்துவாரகையிலுள்ளோர்

இப்பெருப்புண்யகாலம் யெல்லோரும்கூடிச்சென்று
ஒப்புடன்வருவோமென்று உயிர்வனமேகினரே.

### பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியானவர்மனதில் கபடம்வைத்து தன்னுடைய தமயனாகிய பலராமரையுங் கூட்டிக்கொண்டு துவாரகாபுரியிலுள்ள யாவற்றுமான ஜெனங்களும் சூழத்தக்கதாக யிந்த புண்ணியகாலத்தில் கானகம்சென்று தீர்த்தமாடி வருவோமென்று வனத்தில்வந்துசேர்ந்து கிருஷ்ணமூர்த்தி சூதசெய்கிறவிதங்காண்க

### பொது கவி.

நீதியாயரசரெல்லாம் நேசமாய்க்கருமம்செய்து
பொழுதபோய்மறைந்தபோது போனவர்வுரக்கம்கொண்டார்
சூதினல்மாயகிருஷ்ணன் தூங்காமல்நீங்கிமெள்ள
பாதிராவளவில்மீண்டுப் பட்டணங்கிட்டினரே.

### பொது வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணதேவர் துவாரகாபுரிபட்டணத்தி லிருக்கப்பட்ட ஆண்பிள்ளைக ளெல்லாம் வனசஞ்சாரம் செய்யப்போய்விட அவரவர்நித்தியகருமங்களைமுடித்து அனைவரும் அசந்து நித்திரைசெய்யும்போது இராத்திரி பதினைந்துநாழிகையில் கிருஷ்ணமூர்த்தியானவர் யிரண்டு கிருஷ்ணனாகவிருந்து துவாரகாபுரிக்குவந்து அர்ச்சுனனுக்கு சுபத்திரையை விவாகம் செய்துவைக்கவேண்டுமென்று தேவேந்திரன் முதலான சப்தரிஷிகளையும் நினைத்தமாத்திரத்தில் அவர்களனைவரும் வருகிறவிதங் காண்க.

### தேவேந்திரன் வருகிற தரு.

இந்திரன்வந்தாரே
யிந்தவிஜயன்காண
சித்தர்கள்சாரணர்
வந்துகொந்தனர்
வானவரனைவர்
யிந்தைதாய்மார்
விசித்திரவெண்சாமரம்
ரம்பையூர்வசியும்
நாட்டியப்பெண்களும்

தேவ இந்திரன்வந்தாரே
யிந்திரன்வந்தாரே
வித்தியாதரர்கள்சூழவே
சிந்தை அந்தனர்
சூழவே இந்தி
வெகுண்டுசூழவே
வீசவே
மேனகைபாடவே
நடனமாடவே இந்தி

மணிமுடிமகா குண்டலமாடவே
மண்ணும்பூஷணம் மின்னிஜொலிக்கவே
வெண்ணையுண்ணருள் கண்ணனைப்பார்க்கவே
விமலனருள்பாதம் கண்டுபணியவே இந்திரன்

## கிருஷ்ணமூர்த்தி சொல் கலி.

புகல்புகுந்தவரைக்கார்க்கும் புரந்தராகேளாயுந்தன்
மகனை அர்ச்சுனருக்கு மங்கையைவிவாகப்செய்ய
தகுதியாய்நீயும்சத்த ரிஷிகளினாலேயுந்தன்
உன்மகனைகாண்டீபர்க்கு மணமதுசெய்விப்பாயே.

## கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் தேவேந்திரமகாராஜனே உன்குமாரனாகிய அர்ச்சுனமகாராஜனுக்கும் யென்தங்கையாகிய சுபத்திராதேவிக்கும் சத்தரிஷிகளினாலே அதிகசீக்கிரத்தில் விவாகம் நடத்திவையும்தேவேந்திர மகாராஜனே.



## அர்ச்சுனன் சுபத்திரை கல்யாண அலங்கார தரு.

பட்டுப்பீதாம்பரத்தால் பந்தல்தன்னை ஜோடித்தார்கள்
ரத்தினத்தூண்களாலே கால்களதுதானிருத்தி

அம்மிவலமாகவே அரசாணிமுன்பாகவே
உண்மையுள்ளவேதியர்கள் உள்ளபடிவேதம்சொல்ல
நன்மையுள்ளசுபதினத்தில் நாரணனார்மைத்துனர்க்கு
மங்கிலியம்தான்தரித்தார் மாலையிட்டுசேலையிட்டார்

### பொது கவி.

மணஞ்செய்துதேவராஜன் மன்னனுமுன்னடந்து
அணிகுழலாளைக்கூட்டி அனுப்பியேவிட்டுகிருஷ்ணர்
வனந்தனில்நித்திரைசெய்யும் மகிழ்பலராமரோடே
யினிதுடன்தானுமேகி யிருந்தவர்வருகின்றாரே.

### பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் விவாகம் நடப்பித்து யிருவரையும் யிந்திரபுரி பட்டணம் போகும்படியாக அனுப்பிவிட்டு தானும் வனத்திற்குச் சென்று அவ்விடம் நித்திரைசெய்யும்போது அர்ச்சுனன் சுபத்திரையைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

### அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் தர்க்கம் தரு.

சுந்திரவதனியே சுபத்திரையெனுங்கண்ணே
சிந்தைகளிக்கமோகம் தெளிந்துதோபெண்ணே

### சுபத்திரை சொல் தரு.

பெண்டைக்கொள்ளுவதென்று பிடித்வேஷம்பொல்லாது
துன்பமுடனேபாபம் துலைந்துதேசொல்வாய்

### அர்ச்சுனன் சொல் தரு.

பாபந்துலைந்ததென்று பழித்தாயேயென்னை நீ
ஆவலாயழைத்ததை அறியாயோபெண்ணே

### சுபத்திரை சொல் தரு.

அரிவேனரியேனுன்னை அருமணப்செய்யவே
சொகுசுமாத்திவந்த திருடர்நீரல்லவோ

### அர்ச்சுனன் சொல் தரு.

கொஞ்சும்கிளியேயென்னை கூடியணைவாயென்று
நெஞ்சம்மனதுவாடி நீயழுகில்லையோ

பொது கவி.

இந்திரபுரியைநோக்கி யிருவரும்வருகும்போது
அந்ததோர்வேலைதன்னில் அமர்ந்தகாவலர்கள்கண்டு
வந்தவர்கேழ்க்கமன்னன் மரிபடாதேகும்போது
அந்தநல்வனத்துக்கேகி அடவுடனுரைசெய்வாரே.

பொது வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனமகாராஜன் சுபத்திரையை மாலையிட்டுக் கொண்டுயிருவரும் மகாசந்தோஷத்துடன் யிந்திரபிரஸ்த்தம் சேர்ந்தார் அப்போதுயிந்தசங்கதியைபலராமர் கிருஷ்ணமூர்த்திக்குத்தெரிவிக்கும்படி வேருக்காரர் வனத்திற்கு வருகிறவிதங் காண்க.

வேருக்காரர் வருகிற தரு.

வாகைபுனையெதிர்குல மன்னர்தன்னைக்காண
வேகமாகவேயோடி வேருகாரரும்தோன்றினார்
பட்டயம்பரிசைபால பாங்குடன்கையில்பிடித்து
கிட்டஅங்குதட்டிகட்டி வேருகாரரும்தோன்றினார்
கண்டவர்பயந்துவோட கடுகியேநடைநடந்து
மண்டலம்நடுநடுங்கி மகிழ்வுடனேடிவாரார்
பலராமர்கிருஷ்ணர் தாங்கும் பாங்குள்ளவனத்தைநாடி
நலமுடன்சேதிசொல்ல நாடியிதோவந்தார்பாரீர் வகை

வேருக்காரர் வசனம்.

அகோ சருணம் சருணமையாசுவாமி பலராமரே ஸ்ரீகிருஷ்ண தேவரே நம்முடைய அகத்திலிருந்த சன்யாசியானவர் அர்ச்சுனமகாராஜனாகிய எங்கள் தங்கையாகிய சுபத்திராதேவியை விவாகம் செய்துகொண்டு போகையில் நாங்கள் யெங்களால்ஆனபரியந்தம் மரித்தும் யில்லாமல் அவனுடைய பட்டணமாகிய யிந்திராபுரிக்கிப் போய் விட்டார்கனையாசுவாமி பகவானே.

பலராமர் சொல் கவி.

ஈரநெஞ்சுடையோன்பேரில் யிஷ்டமாகிருஷ்ணாகேளாய்
மூரியேசேனையோடு மூடிகியேகடுகிச்சென்று
சோரம்செய்விஜயகான துஷ்டனைத்துணிக்கவேண்டும்
வீரவாளெடுத்துநீதான் வெகுண்டுமேவாராய்தம்பி

பலராமர் சொல் வசனம்.

அகோவாரும் தம்பிகிருஷ்ணதேவரே நெஞ்சில் யீரமில்லாத அந்த சன்னாசியாகிய அர்ச்சுனன் நமது சுபத்திராதேவியை சோரபாவத்தாக மாலையிட்டு தன்னுடைய பட்டணம் யிட்டுக்கொண்டு போய்விட்டானல்லவா அவனையினிநாம்சும்மா விடலாகாது ஆகையால் வீரவாளை யெடுத்துக்கொண்டு அர்ச்சுன்பேரில் யுத்தத்திற்கு அதி கவிரைவாகப் புரப்படுந்தம்பி கிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வாணிசேரலைகையேந்தும் மன்னவாயுந்தனுக்கு
நாளிலேசொல்லிவந்தேன் காணுமேபயநானேன்
வேலைகளறிந்துசொன்னால் வெகுண்டுமேயிகழ்வாருண்டோ
காளையாம்சன்னியாசி களவெலாம்வெளியாச்சென்றே

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் தமையனாரே காட்டில் யிருந்த அந்த சன்னாசியை முதலில் கொண்டுவந்து நமது அரண்மனையி லிருக்கும்படி சொன்னீர் நான் கூடாதென்று பலதரமும் தடுத்துச் சொல்லியும் யென்வார்த்தையைக் கேளாமல் போய்விட்டீர் அந்தசன்னாசிசெய்த களவுகள் யிப்போது வெளியாச்சுதுபாரும் அண்ணாவே.

பலராமர் சொல் கவி.

கள்ளனென்றறிந்தேனானால் கண்டதோர்வில்லாலன்று
துள்ளவேகொள்வேனப்போ அவன்செய்கைமெய்யென்றெண்ணி
வின்னவே அழைத்தேனல்லாள் வேண்டியேசுபத்திரைதன்னை
மெள்ளவேகொண்டுபோன விஜயனைக்கொல்லுவேனே.

பலராமர் சொல் வசனம்.

கேளும்தம்பி கிருஷ்ணமூர்த்தியே அந்தசன்னாசியாகிய அர்சுனனவன் யிப்படிசெய்வானென்று தெரிந்தால் அப்போதேயென் அஸ்தத்திலிரானின்ற வில்லுக்கு யிரைகொடுத்திருப்பேன் சன்னாசியென்று யோசித்து நமது வளவில் கொண்டுவந்து சேர்த்தேன் யிப்படி மோசம்செய்து நமதுதங்கையாகிய சுபத்திரையை மாலை சூட்டி அழைத்துக் கொண்டுபோய்விட்டான் ஆகையால் நமதுதங்கையைக்

கொண்டுபோன சன்னியாசியாகிய விஜயனைக் கொல்லுகிறேன்பாரும் தம்பி கிருஷ்ணதேவா.

### கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

அகோவாரும் அண்ணாவே அந்தசன்னாசியாகிய விஜயனைநம்மிடவீட்டில் ஆகாதென்று நானெத்தனையோ விதம் சொன்னாலுங்கேளாமல் அவனைக்கொண்டுவந்து யிவ்விடம் சேர்த்தீர் ஆனபடியினால் அவன் சுபத்திரையை விவாகம் செய்துக்கொண்டுதெரியாமல்போய்விட்டானே அவனும் நமது தங்கையின் புருஷனச்சுதே அவனைக் கொன்றுவிட்டால் நம்முடைய தங்கையாகிய சுபத்திரை யம்மன் விதலையாகிப்போவாளே அதற்குநான்யென்னசெய்யப்போகிறேன் அண்ணாவே.

### பலராமர் சொல் கவி.

தீர்க்கமாயிரண்டுபேரும் செட்டியும்தட்டான்போல
யேர்க்கவேபேசிநீங்கள் யிட்டதோர்கலகந்தானே
மார்க்கமாய்சொன்னால்நானும் மருப்பதுவழக்கந்தானே
கார்க்கவேசுபத்ரைதன்னை கடுகவேயழைத்திடாயே,

### பலராமர் சொல் வசனம்.

அகோவாரும் தம்பி கிருஷ்ணா யிந்த விஷயங்களெல்லாம் உன்னால் யேர்பட்ட கலகமேயன்றி வேறில்லை ஆனால் அர்ச்சுனராஜனையும் தங்கையாகிய சுபத்திரையம்மனையும் யிவ்விட வரவழைத்து யிருவரையும் ஊர்பிரதக்ஷணம் செய்துவையும் நான்யென்கண்ணினால்பார்க்கவேண்டும் ஆகையால் அவர்களை அழைத்துவரும்படி தூதுவரையனுப்பும் கிருஷ்ணதேவனே.

### பொது கவி.

அப்படியாகுதென்று அக்ஷணம் தூதாள்விட்டு
செப்பமாயிருவர்தம்மை சிறப்புடன்கோலம்செய்து
ஒப்புள்ளயிருவர்தாமும் உயிரிந்ராபுரியைச்சேர்ந்து
தப்பிலாத்தமையன்கூட தானுமேவாழ்ந்திருந்தார்

### பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் பலராமர் சொல்லியபிரகாரம் யிந்திரபிரஸ்தம் சென்றிருந்த அர்ச்சுனமகாராஜனையும் தங்கையாகியசுபத்

திரையம்மனையும் சாரணர்களைவிட்டு யிருவரையும் துவாரகாபுரி பட்டணத்துக் கழைத்துவந்து பதினெட்டுவகை மேளவாத்தியத்துடன் தாம்தாமென்று முழுங்கத்தக்கதாக அர்ச்சுனமகாராஜனையும் சுபத்திரையம்மனையும் பட்டணம் பிரதக்ஷணம் செய்வித்து யிருவரையும் தங்கள் பட்டணமாகிய யிந்தாராபுரி பட்டணத்தில் கொண்டுவந்துவிட்டார்கள் பிறகு அர்ச்சுனமகாராஜன் சுபத்திரை சமேதராக அதிகசந்தோஷத்துடன் தனது தமையன் தம்பிமார்களுடனே ஆனந்த சந்தோஷமாக யிந்திர பிரஸ்தத்தை அரசாக்ஷியும் செய்துக்கொண்டு வருகிறார்கள் யென்பதாம்.

## வாழி கவி.

சுபத்திரகாதல்தன்னை சீருடன்கேட்போர்வாழி
தபத்தினில்பெரியோரான சதுர்மறையோர்கள்வாழி
மிருத்தபமுனிவோர்வாழி விண்ணுள்ளோரெவரும்வாழி
ஜெகத்தினிலுள்ளோர்வாழி தேசமும்வாழிதானே.

## மங்களம் தரு.

மங்களம் மங்களம் பவத்துதே மங்களம் மங்களம்
ஸ்ரீராமசந்திரருக்கு ஜெயமங்களம் நல்ல
திவ்யமுகசந்திரருக்கு சுபமங்களம்
மாராபிராமனுக்கும் மன்னுபரந்தாமனுக்கும்
யீராருராமனுக்கும் யிரவிகுல சோமனுக்கும் மங்க

சுபத்திரை மாலையீடு நாடகம்

முற்றிற்று.

திருமகள் விலாச அச்சியந்திரசாலை சென்னை;—1949.

# நாடகப் புஸ்தக விளம்பரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சாவித்திரி நாடகம் | 0 | 12 |
| துரோபதை குறவஞ்சி நாடகம் | 0 | 12 |
| கிருஷ்ணன் தூது நாடகம் | 0 | 12 |
| சர்ஜரி மாலையிடு நாடகம் | 1 | 0 |
| சுபத்திரை மாலையிடு நாடகம் | 0 | 12 |
| கீசக நாடகம் | 1 | 0 |
| மார்க்கண்டேயர் நாடகம் | 1 | 4 |
| மன்மத நாடகம் | 0 | 12 |
| அர்ஜுனன் தபசு நாடகம் | 0 | 12 |
| அல்லி நாடகம் | 1 | 0 |
| ஏணி ஏற்ற நாடகம் | 0 | 12 |
| பவளக்கொடி நாடகம் | 0 | 12 |
| பட்டிணத்தார் நாடகம் | 0 | 12 |
| ருக்மாங்கத நாடகம் | 0 | 12 |
| காளிங்க நிர்த்தன நாடகம் | 0 | 10 |
| சூரசம்ஹார நாடகம் | 0 | 10 |
| வள்ளியம்மை நாடகம் | 0 | 10 |
| வெங்கடேசப் பெருமாள் நாட | 0 | 12 |
| சீமந்தினி கலியாண நாடகம் | 0 | 10 |
| வாலிமோக்ஷ நாடகம் | 1 | 0 |
| கோவல நாடகம் | 1 | 0 |
| தாடகை சம்மார நாடகம் | 0 | 12 |
| காத்தவராயன் நாடகம் | 0 | 12 |
| துரோபதை மாலையிடு நாடகம் | 0 | 12 |
| முதல்நாள் சண்டை நாடகம் | 0 | 12 |
| திருநீலகண்ட நாயனார் நாடகம் | 0 | 10 |
| பீஷ்மா சண்டை நாடகம் | 0 | 10 |
| ஸ்ரீராமர் தரிசன நாடகம் | 0 | 10 |
| அறக்குமாரிகை நாடகம் | 1 | 0 |
| இராஜரூப நாடகம் | 0 | 10 |
| [illegible] மாலையிடு நாடகம் | 0 | 12 |
| [illegible] பெருமாள் நாடகம் | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| மதுகயிடாசுர சம்மார நாடகம் | 0 | 12 |
| அஞ்சுமதி கலியாண நாடகம் | 0 | 10 |
| மதிவல்லபன் கலியாண நாடக | 0 | 10 |
| பனிரண்டாநாள் சண்டை நாட | 0 | 10 |
| விறகுவிற்ற படல நாடகம் | 0 | 10 |
| தண்டகாசுரன் சண்டை நாட | 0 | 10 |
| பத்மாசுர சம்மார நாடகம் | 0 | 10 |
| இராமரிஷி நாடகம் | 0 | 10 |
| மாணிக்கவாசகர் நாடகம் | 0 | 10 |
| அமராவதி மோக்ஷ நாடகம் | 0 | 10 |
| அபிமன்னன் சண்டை நாடகம் | 1 | 0 |
| சயிந்தவன் சண்டை நாடகம் | 1 | 0 |
| இராவணன் சம்மார நாடகம் | 1 | 0 |
| கர்ணமோக்ஷ நாடகம் | 1 | 0 |
| மாடுபிடி சண்டை நாடகம் | 1 | 0 |
| மின்னொளி குறவஞ்சி நாடகம் | 1 | 0 |
| விநாயகர் திருக்கலியாண நாட | 0 | 12 |
| ஸ்ரீராமர் பட்டாபிஷேக நாடக | 0 | 12 |
| சந்திரகலை கர்வபங்க நாடகம் | 0 | 10 |
| அரவான் கடபலி நாடகம் | 0 | 10 |
| காண்டவதகன நாடகம் | 0 | 10 |
| தாமரைத்துவச நாடகம் | 0 | 10 |
| ருக்மாங்கத சரித்திரம் | 0 | 12 |
| சக்குபாய் சரித்திரம் | 0 | 12 |
| குசேலமுனிவர் சரித்திரம் | 0 | 12 |
| பப்ரவாயன் சண்டை நாடகம் | 0 | 12 |
| கிருஷ்ண விலாசம் | 0 | 12 |
| சனிவார விரத நாடகம் | 0 | 12 |
| பதினெட்டாம்போர் நாடகம் | 0 | 12 |
| சயிந்தவ நாடகம் (வி. கிருஷ்ணப் பிள்ளை இயற்றியது.) | 1 | 0 |


B இரத்தின நாயகர் ஸன்ஸ்,

வெங்கடராமய்யர் தெரு, ஜீ. டி., சென்னை.

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை